விலை ரூபா: 7.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பதினெட்டு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி 28 | திங்கட்கிழமை | (13.09.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 269

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சீமெந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## அரசு - புலிகள் முரண்பாட்டை நீக்கி

# சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் நம்பிக்கையுடன் சொல்ஹெய்ம் வருகிறார்!

**இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்றுவந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கடந்த 20 மாதங்களாக ஏற்பட்டிருந்த முரண்பட்டநிலையைப் போக்கி மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான நம்பிக்கையுடன் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இன்று இலங்கை வரவுள்ளார்.**

ஐந்துநாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று இலங்கைவரும் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரையும், வன்னியில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் 15 ஆம் திகதி புதன்கிழமை சந்தித்துப் பேசவுள்ளார்.

தொடர்ச்சியாக ஐந்து தினங்கள் இலங்கையில் தங்கியிருக்கும் எரிக் சொல்ஹெய்ம் அரசாங்கத்தையும், விடுதலைப் புலிகளையும் சமாதானப் பேச்சுவார்த்தையை மேசைக்குக் கொண்டுவரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளார்.

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது தொடர்பாக எழுந்துள்ள முரண்பாடான நிலைப்பாடுகளைக் களையும் நோக்குடன் லண்டனில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை இம்மாதம் 1 ஆம் திகதி சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மும், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கரும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

இப்பேச்சுவார்த்தைகள் தொடர்பாக நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு ஹொட்டன் பிளேசில் தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

கொழும்பு ஹொட்டன் பிளேசிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து விஜேந்திர பீற்றர் லயன் (வயது 35) என்ற தமிழ் இளைஞர் ஒருவர் நேற்று நண்பகல் 12 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். காயமடைந்த மற்றொருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞர் கொழும்பு ஹொட்டன் பிளேசிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து வெளியேறும்போதே சுடப்பட்டுள்ளார்.

கொலையுண்ட தமிழ் இளைஞர் பொரளை மகசீன் வீதியில் வசிப்பவர் என்று இனங்காணப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இக்கொலை தொடர்பாக பொலிஸார் மேலும் தகவல் தருகையில் இக்கொலையைச் செய்த சந்தேக

(18 ஆம் பக்கம் பார்க்க)

## 40 ஊடகவியலாளர்கள் நேற்று வன்னி சென்றனர்

(கொழும்பு)

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் தென் பகுதியைச் சேர்ந்த 40 ஊடகவியலாளர்கள் நேற்று வன்னிப் பகுதிக்குச் சென்றுள்ளார்கள்.


சமாதான சபையின் ஊடகப் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா தலைமையில் புறப்பட்டுள்ள இக்குழுவில் தேசிய இணைப்பாளர் எஸ்.பி.நாதன், சமாதான சபையின் சிரேஷ்ட உறுப்பினர் நிமலன் கார்த்திகேசன் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

நான்குநாள் விஜயம் மேற்கொள்ளும் இவர்கள் இரு தினங்கள் கிளிநொச்சியில் தங்கியிருந்து அங்குள்ள நிலைமைகளை ஆராய்வதுடன் விடுதலைப் புலிகளையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் வந்து இங்குள்ள தற்கால நிலைமைகளை அவதானிப்பதுடன், யாழ். பல்கலைக்கழக சமூகம் மற்றும் பல்வேறுபட்ட தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

சமாதான சபையின் தலைமையில் செல்லும் இக்குழுவினர் வடக்குத் தெற்கு மக்களுக்கிடையே புரிந்துணர்வினை ஏற்படுத்தி மக்களின் உண்மையான நிலைபரத்தை ஊடகங்கள் வழியாக எடுத்துக்கூறுவது இந்த விஜயத்தின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-08)

### இன்று நல்லைக் கந்தனின் தேர்த் திருவிழா



## தென்னிலங்கைத் தேரர்கள் 45 பேர் யாழ்ப்பாணம் விஜயம்

### கிளிநொச்சியில் புலித்தேவனையும் சந்திப்பர்

(கொழும்பு)

மதங்களுக்கிடையிலான சமாதான அமைப்பு மற்றும் செடெக் நிறுவனமும் இணைந்து 20 வருட காலமாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாண மக்களினதும், பிரதேசங்களினதும் பாதிப்புக்களையும் பௌத்த தேரர்களுக்குத் தெரியப்படுத்தும் நோக்கில் 45 தேரர்களைக்கொண்ட குழுவொன்று நேற்று வவுனியாவை வந்தடைந்துள்ளது.

நேற்று வவுனியாவை வந்துடைந்துள்ள தேரர்குழு இன்று விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவனை கிளிநொச்சியிலுள்ள சமாதான செயலகத்தில் சந்திக்கவுள்ளனர்.

யாழ்ப்பாணம் வரும் இக்குழுவினர் யாழ்ப்பாணத்திலுள்ள சர்வமதத் தலைவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். அதனைத் தொடர்ந்து நாகவிகாரைக்குச் செல்லும் அவர்கள், விகாரையின் முன்னால் நாட்டில் சமாதானம் ஏற்பட சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனக்கோரி ஒரு மணித்தியாலம் சத்தியாக்கிரகத்திலும் ஈடுபடவுள்ளனர்.

பதுளை மாவட்டத்தைச் (18 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே 30 மில்லியன் அமெ. டொலர்களை நிதியுதவியாக இலங்கைக்கு வழங்கவுள்ளது

### நிதியமைச்சின் செயலாளர் தகவல்

(நமது நிருபர்)

2005 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு 30 மில்லியன் அமெரிக்க டொலர்களை நோர்வே அரசு நிதியுதவியாக வழங்கவுள்ளதென நிதியமைச்சின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வருடந்தோறும் நிதியுதவி அளித்துவரும் நோர்வேயின் பிரதிநிதிகளோடு நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி பி.பி.ஜயசுந்தர கடந்த வாரம் நடத்திய பேச்சுவார்த்தையின் பெறுபேறாகவே நோர்வே அரசு 30 மில்லியன் அமெரிக்க டொலரை நிதியுதவியாக வழங்க இணங்கியுள்ளது.

நோர்வே அரசின் இந்த நிதியுதவி தொடர்பாக நிதியமைச்சின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர மேலும் தகவல் தருகையில் தெரிவித்திருப்பதாவது,

இலங்கையின் அபிவிருத்தி விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்கு நோர்வே அரசு வருடந்தோறும் 25 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியுதவியாக வழங்கி வந்தபோதும், 2005 ஆம் ஆண்டின் அபிவிருத்திக்காக மேலும் 5 மில்

(18 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...
நல்லூர்க் கந்தன் திருத்தேர் சிறப்புமலர்
*********
நொச்சியம்பதி சித்தி விநாயகர் தேர்த்திருவிழா சிறப்புமலர்

## புல்லுமலையில் புதையுண்ட நிலையில் இரண்டு சடலங்கள் கண்டுபிடிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செங்கலடி - பதுளை வீதியிலுள்ள புல்லுமலைக் காட்டுப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் 2 சடலங்கள் நேற்றுக்காலை மகாஓயா பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களிடமிருந்து கிடைத்த தகவலையடுத்து புதைக்கப்பட்ட நிலையில் இந்தச் சடலங்கள் இரண்டும் அடையாளம் காணமுடியாத நிலையில் மகியங்கனை நீதிவானின் உத்தரவின் பேரில் நேற்று மாலை அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டன.

கடந்த புதன்கிழமை இரவு புல்லுமலையிலுள்ள விடுதலைப் புலிகளின் காவல்நிலை மீதான தாக்குதல் சம்பவத்தின்போது விடுதலைப் புலிகளின் பதில் தாக்குதலில் கொல்லப்பட்ட ஆயுதக்குழுக்களைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, இந்தக் காட்டுப் பகுதியை அண்டிய கிராமவாசிகளின் தகவலின்படி இந்தத் தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னதாக காட்டுப்பகுதியில் ஆயுதக் குழுவொன்று இரண்டு மூன்று தினங்கள் தங்கியிருந்ததாகவும், தாக்குதல் சம்பவத்தின் பின் இவர்களின் நடமாட்டம் அங்கு காணப்படவில்லை என்றும் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக யுத்தநிறுத்

(18 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகளுக்குப் பொறுப்பான இணைத்தலைவர்களாக மஹிந்த,ரணில்?

சமாதான முயற்சிகளுக்குப் பொறுப்பாக இணைத் தலைவர்கள் இருவரை நியமிப்பதற்கு ஜனாதிபதி குமாரதுங்க தீர்மானித்துள்ளார்.

இவ்விணைத் தலைமைப் பதவிகளுக்கு பிரதமா மஹிந்த ராஜபக்ஷவையும் எதிாக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் நியமிப்பதற்கு ஜனாதிபதி உத்தேசித்துள்ளா எனத் தெரியவருகிறது. ஜனா திபதிக்கும் எதிாக்கட்சித் தலை வருக்கும் இடையில் கடந்த வியாழனன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இவ விடயம் குறித்து உத்தியோகபூர்வமற்ற வகையில் கருத்து பரிமாறப்பட்டதாகவும் எனினும் இணக்கப்பாடு எதுவும் ஏற்படவில்லை எனவும் ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எவ்வாறெனினும் சமாதான முயற்சிகளின் இணைத் தலைமைப்பதவியை எதிர்க்கட்சித் தலைவரை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு இராஜதந்திர வட்டாரங்கள் மூலமும் முயற்சி செய்வதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

அரசாங்கத்தின் சார்பில் சமாதான முயற்சிகளின் இணைத்தலைவர் பதவியை ஏற்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் ஜனாதிபதி ஏற்கனவே கோாிக்கை விடுத்துளளாா. இத்தலைவாகள் சபையின மேற்பார்வையின் கீழ் மற்றொரு சமாதான சபையொன்றை ஏற்படுததி சமாதான முயற்சிகளை முன் னெடுத்துச் செல்வதே ஜனாதிபதியின் நோக்கம் எனத் தெரியவருகிறது. இதுதொடர்பாக சிறுபான்மைக் கட்சிகளுடனும் பேச்சுவாா த்தை நடத்துவதற்கு அவா் உத்தேசித்துள்ளாா் என ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

சமாதான முயற்சிகளின் இணைத் தலைவா் பதவியை ஏற்பதற்கு எதிாக கடசித் தலைவரின் சம்மதம் கிடைத்தால் இன்று இலங்கைக்கு வரவுள்ள நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் எாிக்சொல் ஹெய்முககு இது குறித்து அறிவித்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற கொள்ள ஜனாதிபதி உத்தேசித்துள்ளாா் எனத தெரியவருகிறது.(க)


## தேசிய மட்ட சித்திரப்போட்டி

# கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவன் இரண்டாமிடம்

(கல்வியங்காடு)

82வது கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட சித்திரப் போட்டியில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவன் த.தஜேந்திரன் மாவட்ட மாகாண மட்டத்தில் முதலாமிடத்தையும் தேசிய மட்டத்தில் இராண்டாமிடத்தையும் பெற்றுள்ளார்.

இவர் வீ.எச்.லேன் இருபாலையைச் சேர்ந்தவர். தவராசா சகுந்தலாதேவி ஆகியோரின் புதல்வன்.



சிறுவயதிலிருந்தே ஓவியம் வரைதலில் ஆர்வமுள்ளவரான இவர் யுனிசெவ் அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்தில் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட ஓவியப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியினால் யாழ்.மாவட்ட பாடசாலை களுக்கிடையே நடாத்தப்பட்ட "அழ கெழல்-2004"ஓவியப் போட்டியில் தரம் 12,13 பிரிவில் முதலாம் இடத்தையும் வென்றுள்ளார்.

இவருடைய ஓவியத் தேர்ச் சியை பாடசாலையிலுள்ள சித்திரப் படங்கள் காண்பிக்கின்றன. இவர் கல்லூரியின் மாணவ முதல்வராகவும் உள்ளார். (74)

# நல்லைச் சூழலில் இன்று

(நல்லூர்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தினத்தில், நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில். நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் நடாத்தப்பட்டவரும் தெய்வீக இசைய ரங்கில் இன்று மாலை 6.30 மணி முதல 7.30மணிவரை ஏ.கே. கருணாகீரனின் இசைக்கச்சேரி இடம் பெறவுள்ளது. பககவாத்தியங்களாக, சயாமளாங்கி கருணாகரன் வயலினும், எம்.சிதம்பர நாதன் மிருதங்கமும், எஸ.சிவராம் கெஞ்சிராவும், எம்.கஜன முகர்சிங்கும் வாசிப்பர்.

இந்து சமய கலாசார அமைச்சின ஆதரவில் நாவலர் மணிமண்டபத்தில இடம்பெற்றுவரும் முத்தமிழ் நிகழ்வுகளில் இன்று மாலை 7 மணிக்கு புனனாலைக் கட்டுவன் தமிழ்மன்றம் வழங்கும் "இந்து விழிப்பு" எனும் தலைப்பிலான கதம்ப நிகழ்வு இடம் பெறவுள்ளது.

* * *

நல்லூர் மேற்குவீதி ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற்று வரும். கான கதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் இசைப் பேருரைத் தொடரில், இன்று மாலை கும்பகர்ணன் வதம் எனும் தலைப்பில் பேருரை இடம் பெறும்.

* * *

நல்லூர் வடகிழக்கு வீதி ஸ்ரீமனோன்மணி அம்பாள் தேவஸ் தானத்தில் கலாநிதி பிரம்மஸ்ரீ கு.நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் தெய்வீக பேருரையில் இன்று மாலை 7.00 மணிமுதல் 8.00 மணிவரை "கந்தப் பெருமான் விஸ்வரூப தரிசனம் எனும் தலைப்பில் இசைப் பேருரை இடம் பெறும்.

* * *

நல்லூர் ஸ்ரீமுருகன் தண்ணீர் பந்தலில் மாலை 6.30 மணிமுதல் 9மணிவரை விஷேட இசை நிகழ்சிகள் இடம்பெறும்

நல்லூர் கம்பன் கழக மண்டபத்தில் மாலை 7.30 மணிக்கு பொன்னாலை சந்திர பரத கலாலயம வழங்கும் நாட்டியாஞ்சலி இடம் பெறவுள் ளது. (ற-7)

# மண்ணெண்ணெய் போல மதுபானம் விற்பனை

(கல்வியங்காடு)

கோப்பாய் சந்திக்கும் கிருஷ்ணர் கோயில் சந்திக்குமிடையிலான பிரதான வீதியில் உள்ள கடைகள் சிலவற்றில் மண்ணெண்ணெய் விற்பது போல, மதுவை விற்பனை செய்துவருகிறார்கள்.

பொழுது புலரும் வேளையில் இவ இடத்தில் கூடும் மதுப் பிரியர்கள் மதுவை அருந்திவிட்டு வீதியால் செல்வோரோடு வீண்வம்பு புரிந்து வருகின்றாாகள்.

இச் செயலானது தொடாந்து நடை பெற்றுவருவதால். சம்பந்தப்பட்ட தரப்பினா் இவ் விடயத்தில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ப-74)

# மீட்புநிதி கடன் மீளளிப்பு இடம் பெறும் நிலையங்கள்

தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு பின்வரும் அட்டவணைக்கு அமைவாக உதவி அரசாங்க அதிபா் பிரிவு ரீதியாக இடம்பெறும் என தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார்.2003 ஆம் ஆண்டு வரை மீளளிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டோரில் இதுவரை. மீளப்பெறாதோரும் ஏதாவதொரு மீளளிப்பு நிலையத்தில் மீட்பு நிதிக்கடனைப் பெற்றுக் கொள்ளலாம்.

01) வன்னி

**17.09.2004 (வெள்ளி)**

| | | | |
|---|---|---|---|
| கிளிநொச்சி மத்திய கல்லூரி | - கிளிநொச்சி | பி.ப | 03.30 மணி |

**18.09.2004 (சனி)**

| | | | |
|---|---|---|---|
| பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம் | - நல்லூர்- பூநகரி | காலை | 08.30 மணி |
| முழங்காவில் மகா வித்தியாலயம் - | முழங்காவில் | மு.ப | 09.45 மணி |
| விடத்தல்தீவு றோ.க பாடசாலை | - விடத்தல்தீவு | மு.ப | 11.00 மணி |
| கறுக்காய்குளம் அ.த.க பாடசாலை | - கறுக்காய்குளம் | ந.ப | 12.00 மணி |
| மல்லாவி மத்திய கல்லூரி | - மல்லாவி | பி.ப | 04.00 மணி |
| அக்கராயன் மகா வித்தியாலயம் | - அக்கராயன் | மாலை | 05.30 மணி |

**19.09.2004 (ஞாயிறு)**

| | | | |
|---|---|---|---|
| மாங்குளம் மகா வித்தியாலயம் | - மாங்குளம் | காலை | 08.00 மணி |
| வருவாய்ப் பகுதி செயலகம் | - புளியங்குளம் | காலை | 08.30 மணி |
| நெடுங்கேணி மகா வித்தியாலயம் | - நெடுங்கேணி | மு.ப | 11.00 மணி |
| ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் | - ஒட்டுசுட்டான் | மு.ப | 11.45 மணி |
| வித்தியானந்தக் கல்லூரி | - தண்ணீரூற்று | மு.ப | 12.30 மணி |
| ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் | - புதுக்குடியிருப்பு | பி.ப | 02.30 மணி |
| விசுவமடு மகா வித்தியாலயம் | - விசுவமடு | பி.ப | 04.00 மணி |

02) யாழ்.மாவட்டம்

இடம் : முகமாலை நுழைவாயிலருகே அமைக்கப்பட்டுள்ள கூடம்.
நேரம் : காலை 8.00 மணி தொடக்கம் பி.ப 4.00 மணி வரை.

**21.09.2004 (செவ்வாய்)**
நல்லூர்,உடுவில்.
**22.09.2004 (புதன்)**
யாழ்ப்பாணம்,கோப்பாய்,தெல்லிப்பளை
**23.09.2004 (வியாழன்)**
மானிப்பாய்,சங்கானை, காரைநகர்,வேலணை, வடமராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி.
**24.09.2004 (வெள்ளி)**
கரவெட்டி,பருத்தித்துறை,சாவகச்சேரி.

# "கொட்டுக்கடப்பு" மக்கள் மனதில் அழியாத இடம்பிடித்துள்ளது

உறப்பார்வை கொண்ட படைப்பாளிகள் கண்டுணர்ந்ததற்கு அப்பால், அகப்பார்வை மட்டும் உள்ளவர்கள் அதன் மூலம் சமூகத்தை எவ்வாறு கண்டிருக்கிறார்கள் என்பதை முகமாலை சேகரின் "கொட்டுக்கடப்பு" என்ற சிறுகதைத் தொகுதியை வாசிக்கும் போது அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

1939ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை 6ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுகதைகளும் 450க்கும் மேற்பட்ட சிறுகதைத் தொகுதிகளும் இலங்கையிலிருந்து வெளியாகியுள்ள போதிலும் சச்சிதானந்தத்தின் "தாகம்" இலங்கையர் கோனின "வெள்ளிப் பாதசரம்" ஆகிய சிறுகதைகளைப்போல வாசகர் உள்ளத்தில் இடம்பிடிக்கவில்லை.

முகமாலை சேகரின் சிறுகதைகளும் இம்மாதிரியான இடத்தைப் பிடிக்கும் என்பதை அவரது சிறுகதைகளை வாசிக்கும் போது நான் உணர்ந்தேன்.

கடந்த புதன்கிழமை மாலை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற முகமாலை சேகரின் "கொட்டுக் கடப்பு" சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவில் ஆய்வுரை நிகழ்த்திய கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்) மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ் விழா வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன், மெய்யியல்துறை வருகை விரிவுரையாளர் இராஸ்ராலின் அடிகளார் ஆகியோரின் ஆசியுரையை அடுத்து பேராசிரியர் ஞா.ஞான குமாரன வாழ்த்துரை வழங்கினார்.

வெளியீட்டுரையை மெய்யியல் துறை முதுநிலை விரிவுரையாளர் க.சிவானந்த மூர்த்தி நிகழ்த்தினார்.

செங்கைஆழியானின் ஆய்வுரையை அடுத்து தமிழ்துறை விரிவுரையாளர் ஈ.குமரன் ஆய்வுரை நடத்தினார். (து)

# கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட எமது நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகிய

## திரு. ஆறுமுகம் சந்திரமோகன் (அருள்தாஸ்)

அவர்களின் திடீர் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம். மேலும் அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர்,
பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்,
நிறுவன ஊழியர்கள், வடகடல் நிறுவனம்
குருநகர்,யாழ்ப்பாணம்.

(C-474)

# சுகாதாரசேவை ஊழியர்களுக்கு இம்மாதம் முதல் சம்பள அதிகரிப்பு

(சுதுமலை)

வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் கடமைபுரியும், துணை மருந்துவ சேவை மற்றும் சுகாதார சேவைகள் சாதாரண மற்றும் சுத்திகரிப்புசேவை ஊழியர்களிற்கு கடந்த ஜனவரி முதல் அமுல் செய்யப்பட்ட சம்பள அதிகரிப்பை இந்த மாதம் சம்பளத் திட்டத்தில் சேர்க்குமாறு கோரி கடந்த வாரம் விசேட சுற்றறிக்கை ஒன்றை வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு சகல பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களிற்கும் அனுப்பிவைத்துள்ளது.

இலங்கையின் பல மாவட்டங்களில் கடந்த 6மாதத்திற்கு முதலாகவே மேற்படி சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுவிட்டது எனவும இது தொடர்பாக சுகாதார சேவைகள் தொழிற்சங்க கூட்டுமுன்னணி பலவித போராட்டங்களை முன்னெடுத்தது. ஆனால் திறைசேரியில் போதியளவு பணம் இல்லாமை காரணமாக இந்த அதிகரிப்பை வழங்கமுடியாமல் போய்விட்டது. அத்துடன் தற்போதும் இவ் அதிகரிக்கப்பட்ட புதிய படியிலே சம்பளம் வழங்கப்படும் எனவும், போதிய நிதி கிடைக்கும் சந்தர்பத்தில் மட்டுமே இவ் அதிகரிப்பின் நிலுவை வழங்கப்படும் எனவும் சுகாதார அமைச்சு தெரிவிதது்ள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை அரசாங்கம் அரச ஊழியர்களுக்கு வழங்க உத்தேசித்துள்ள இடைக்கால சம்பளக கொடுப்பனவு வழங்கும் திட்டத்தில் சுகாதார சேவை ஊழியர்களைக் கருத்தில் எடுககாது மற்றைய துறைசார் ஊழியர்களுக்கு வழங்கப் போவ தாகவும் அறிவித் திருப்பதாகவும் தெரியவருகிறது. (க-252)

# ஈராக் கைதிகள் சித்திரவதை; அமெ. இராணுவ வீரருக்குச் சிறை

(பக்தாத்)

ஈராக்கின் அபுகிராய்ப் சிறையில் ஈராக் கியர்கள் சித்திரவதை செய்யப்பட்டது தொடர்பாக அமெரிக்க இராணுவ வீரர் ஒருவருக்கு 8 மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு நடத்தை சரியில்லாததன் காரணமாக அவர் இராணுவத்திலிருந்தும் நீக்கப்பட்டுள்ளார். பக்தாத்திலுள்ள அமெரிக்க சிறப்பு நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை கடந்த சனிக்கிழமை வழங்கியுள்ளது.

தண்டனை பெற்றுள்ள ஜே.குருஸ் (24) டெக்சாஸைச் சேர்ந்தவர். 502-வது படைப் பிரிவைச் சேர்ந்த இவர் ஈராக்கிய கைதிகளை நிர்வாணப்படுத்துமாறு அமெரிக்க வீரர்களுக்குத் தான் உத்தரவிட்டதை, விசாரணையின்போது ஒப்புக்கொண்டார் குருஸ்.

மேலும் கைதிகளின் கைகளை விலங்குகளால் பூட்டி, அவர்களது பாலுறுப்புகள் தரையில்படுமாறு தவழ்ந்து செல்லவைத்ததையும்,

கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டதை மறைக்க இராணுவப் பொலிஸாருடன் சேர்ந்து சதிசெய்ததையும் அவர் ஒப்புக் கொண்டார்.

அவர் எந்தச் சிறையில் அடைக்கப் படுவார் என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என இராணுவ செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

மூன்றாண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவின் பென்டகன் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தப்பட்ட தினத்திலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வழக்குத் தொடர்பாக குருஸின் படைக்குழுவைச் சேர்ந்த 6 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். விசாரணை நடக்கும் நீதி மன்றத்துக்குப் பாதுகாப்பு பலப்படுத் தப்பட்டுள்ளது. (ற-7)



இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள அவுஸ்திரேலியத் தூதரகத் தில் கார்க் குண்டுவெடித்ததில் 9 பேர் உயிரிழந்தனர். சுமார் 173 பேர் படுகாயமடைந்துள்ளனர். இதில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் குண்டுவெடித்த இடத்திற்கு அருகே மலர்களை வைக்கும் பெண்கள்

WORLD NEWS உலக தரிசனம்




செட்ரெம்பர் 11 தாக்குதலின் நினைவுதினம் நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது. இதையொட்டி மணிலாவில் நடைபெற்ற பேரணியில் பங்கேற்றவர்கள் செப்ரெம்பர் தாக்குதலை அடுத்து அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் மீது தாக்குதல் நடத்தியதில் பல்லாயிரக்கணக்கான பொது மக்களை கொன்றதற்கு கண்டனம் தெரிவிக்கும் வாசகங்கள் அடங்கிய பதாகைளை பிடித்திருந்தனர் அதில் ஒன்று.

# பயங்கரவாதத்தை எதிர்த்து தளராமல் போர் புரிவோம்!

## அமெ.அதிபர் சூளுரை

பயங்கரவாதத்தை எதிர்த்து தளராமல் போர் புரிவோம் என அமெரிக்க அதிபர்ஜோர்ஜ் டபிள்யு புஷ் கூறியிருக்கிறார்.

பயங்கரவாதத்தை வீழ்த்தி ஜனநாயகமே இறுதி வெற்றிபெறும் என அதிபர் தேர்தலில் புஷ்ஷை எதிர்த்து ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் ஜோன் கொரி கூறியுள்ளார்.

2001 செட்ரெம்பர் 11-ல் அமெரிக்காவின் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திய சம்பவத்தின் மூன்றாம் ஆண்டு நினைவு தினம் நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

அத்தாக்குதலில் கொல்லப்பட்ட 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் நினைவாக பிரார்த்தனைகள் நடை பெற்றன. நாடுமுழுவதும் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப் பட்டது.

இந்நினைவு தினத்தை முன்னிட்டு அமெரிக்க அதிபர் புஷ் வானொலியில் உரையாற்றும்போது, பயங்கரவாதிகள் எங்கே பயிற்சி பெற்றபோதிலும், எங்கே ஓய்வெடுத்த போதிலும் எங்கே காலூன்ற முயன்ற போதிலும் தேடிச் சென்று போரிடுவோம்.

அமெரிக்காவுக்கு இன்னும் ஆபத்து இருக்கிறது என்பதை உணர்த்திருக்கிறோம். எமது மக்களைக் கொல்வதற்குத் திட்டம் தீட்டிய பயங்கரவாதிகளைத் தேடிக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கும் வரை நாங்கள் ஓயப்போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் ஜோன்கொரி பாஸ்டன் நகரில் நடைபெற்ற நினைவுதினக் கூட்டத்தில் உரையாற்றும்போது அமெரிக்கர்கள் மன உறுதிபடைத்தவர்கள். பயங்கரவாதிகளை வீழ்த்தி சுதந்திரம் இறுதி வெற்றி பெறும் என்பதை இந்த மனஉறுதி நிருபிக்கும் எனத் தெரிவித்தார். (ற-7)



# ஆலயங்களுக்கு அறங்காவலர்களை நியமிக்க முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவு

தமிழ்நாட்டில் இணை ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர் தகுதியுள்ள பெரிய திருக்கோவில்களுக்கு அறங்காவலர்களை நியமிக்குமாறு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஆணைபிறப்பித்துள்ளார்.

இத்தகவலை திருவாரூரில் நடைபெற்ற தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் விழுப்புரம் மாவட்டங்களைச் சேர்ந்த திருக்கோவில் செயல் அலுவலர்களின்பணி ஆய்வுக்கூட்டத்தில் தலைமைவகித்து உரையாற்றிய அறநெறித்துறை அமைச்சர் பி.ரி.ராமசாமி தெரிவித்துள்ளார்.



சகல மாவட்டங்களுக்கும் அறங்காவலர் குழுக்களை நியமிக்க முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார். கடந்த 3 வருடங்களில் தமிழ்நாட்டில் மூவாயிரத்து 450 திருக்கோவில்களுக்கு திருப்பணி நடாத்தப்பட்டு, கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டதாக கூறிய அமைச்சர், இவ்வருடம் தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் வாழும் பகுதியில் ஆறாயிரம் திருக்கோவில்களில் அமைக்க 17 கோடி ரூபா ஒதுக்கப்பட்டள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (து)

## இந்தியச் செய்தி



தலையில் நெருப்பு...முகத்தில் சிரிப்பு.. அதுதான் இந்த ராஜஸ்தானி நாட்டுப்புறக் கலைஞரின் அடையாளம். பிக்கானீரில் ஒரு ஹோட்டலில் சனிக்கிழமை அவர் ஆடியபோது எடுத்த படம் இது.

## கருணாநிதி மீது வழக்கு

(சென்னை)

பகவத்கீதை பற்றிக் கேவலமாக பேசிய தி.மு.க தலைவர் கருணாநிதி மீது நீதிமன்றில் வழக்குத் தொடருவோம் என இந்து முன்னணி நிறுவன அமைப்பாளரான ராம்கோபாலன் எச்சரித்துள்ளார்.

அண்மையில் கருணாநிதியை தான் சந்தித்ததாகவும் அதன்போது பகவத் கீதையை பற்றி கேவலமாக அவர் பேசியதுடன் பகவத் கீதைக்கு எதிராக வீரமணி எழுதிய கீதையின் மறுபக்கம் என்ற நூலை தன்னிடம் தந்ததாகவும் கூறிய கோபாலன் பகவத்கீதையை அவமதித்த கருணாநிதிக்கு எதிராக சென்னை நீதி மன்றில் வழக்குத் தொடரப்போவதாகக் கூறினார். (க)



சுதந்திரப் போராட்ட தியாகியான விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த ராஜ்பிள்ளை என்பவருக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் வாடகைகுடியிருப்பு ஒன்றினை ஒதுக்கீடு செய்து அதற்கான ஆணையை அவரிடம் வழங்கினார் முதலமைச்சர் ஜெயலலிதா.

புதிய கல்வித்திட்டத்திற்கு அமைய

# பாடசாலைக் கற்றலில் ஆர்வமுள்ள சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோம்!

## மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(பருத்தித்துறை)

பாடசாலைக் கற்றலில் ஆர்வமுள்ள சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதுதான் புதிய கல்வித்திட்டத்தின் நோக்கமாகும்.

சமுதாயத்திற்குத் தேவையான சிறந்த பிரஜைகளை உருவாக்குவது ஆசிரியர்களின் கடடையாகும்.

இவ்வாறு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய கட்டடங்கள் திறப்பு விழாவிலும், பரிசளிப்பு விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வடக்கு-கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் குறிப்பிட்டார்.

அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் விழா நடைபெற்றது.

இந் நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சின செயலாளர் தியாகலிங்கம்,

வடக்கு-கிழக்கு மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து அழிவுகளின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். பல்வேறு இடங்களிலும் அழிவுச்சின்னங்களைக் காண்கின்றோம். இத்தனைக்கும் மத்தியில் நிலைத்து நிற்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இவ்வித்தியாலயத்தைப் பொறுத்தவரையிலே சிறப்பான அதிபர், ஆசிரியர்கள்,அபிவிருத்தி நோக்கம்கொண்ட கல்விச் சமூகம் ஆகியன இணைந்து செயற்பட்டு வருவதைக் காணமுடிகின்றது.

நிக்கொட் நிறுவனம் கல்வி அபிவிருத்திக்கு முன்னுரிமை கொடுத்து செயற்திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது. இதனை நாம் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

எந்த நாட்டிலும் அழிவுக்குப் பின் கல்விப் பிரச்சினையை முன்னேற்ற வேண்டியதே முக்கியமாகின்றது. அவ்வாறு கல்வித்துறை பழைய நிலைக்கு வரும்போது தான் புனரமைப்பு நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொள்ள முடியும.

வசதிகுறைந்த மாணவாகளின் கல்வியை மேம்படுத்துவதற்காகவே அரசாங்கம் மத்திய மகாவித்தியாலயங்களை ஆரம்பித்தது. இம் மாகாவித்தியாலயம் சிறந்த கல்வி பாரம்பரியத்தைக் கொண்டது. போர் அனர்த்தங்களினால் பேரழிவுக்குட்பட்டது. தற்போது மீண் பழைய நிலைக்கு வந்துகொண்டிருக்கிறது.

மாணவர்கள் தங்கள் அறிவு ஆற்றல்களை மேம்படுத்துவதற்கு தேடல் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். சிறந்த கற்பித்தல் முறைகள மேற்கொள்ளப்படவேண்டும். மாணவர்கள் மகிழ்ச்சிகரமான கற்றலில் ஈடுபடவேண்டும். மாணவர்கள் புதிய விடயங்களை விளங்கிக் கற்கவேண்டும்.

மாணவர்கள் சுய முயற்சி தீர்மானங்களை நிறைவேற்றும் பண்பு, தலைமைத்துவம், தொடர்பாடல் ஆகியவற்றில் முக்கிய கவனம் எடுக்க வேண்டும். இன்று ஆங்கிலம், கணனி அறிவுகள் மிக முக்கியமாகின்றன. இவ் அறிவுகள இல்லையேல் நவீன தொழில்நுட்ப, விஞ்ஞான யுகத்தில் நாம் தோல்வி கண்டவர்களாவோம் என்றார்.(க-52)

# நிவாரண மீளாய்வை உடனடியாக நிறுத்துக!

## பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை

(மருதங்கேணி)

யாழ்.குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்காக வழங்கப்பட்டுவரும் உலர் உணவு நிவாரண வழங்கல் தொடர்பான மீளாய்வு நடவடிக்கையைக் கண்டித்து வடமராட்சி மக்கள் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் எஸ்வசந்தகுமாரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் திரண்ட இடம்பெயர்ந்த மக்கள் இம் மகஜரைக் கையளித்துள்ளனர்.

யுத்த நிறுத்தம் அமுலில் உள்ள போது இயல்பு வாழ்வு, மீளகுடியமர்வு என்பன சாத்தியப்படாததால் பாதிக்கப்பட்டுள்ள யாழ்.குடாநாட்டில் வாழும் இடம்பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவு நிவாரணத்தை நிறுத்துவதன் நோக்கமாகக்கொண்டு அரசினால் மேற்கொண்டுவரும் இந் நிவாரண மீளாய்வு நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என அம் மகஜரில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு அரசின் மீளாய்வு நடவடிக்கைகள் கைவிடப்படாவிட்டால் பாரியளவிலான போராட்டங்களை நடத்தப்போவதாக அறிவித்துள்ள மக்கள் இயல்புவாழ்வு, மீளக்குடியமர்வு என்பன சாத்தியப்படும்வரை நிவாரண உதவிகள் தொடர்ந்தும் வழங்கப்படவேண்டும் என மகஜரில் மேலும் வலியுறுத்தியுள்ளனர்.

* * *

(திருநெல்வேலி)

வலிகாமம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வாழும் குடும்பங்கள், தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் நிவாரண மீளாய்வு நடவடிக்கைகளை நிறுத்துமாறும் பொருட்களின் விலை அதிகரிப்பை கவனத்தில் கொண்டு நிவாரணத் தொகையை இரடிப்பாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரி கடந்த வெள்ளிக்கிழமை வலிகாமம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின ஊடாக பருத்திததுறை பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

தமது கோரிக்கைகளுக்கு சாதகமான முடிவு கிடைக்காவிட்டால் சாத்வீகப் போராட்டங்களில் ஈடுபடப்போவதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர். (ப-43)

# குற்றச்செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க மக்கள் ஒத்துழைக்க வேண்டும்

## பிரதமர் வேண்டுகோள்

(கொழும்பு)

இன்றைய சமுதாயம் குற்றங்



கள் மலிந்ததாக மாறிவிடடது எனவும் இந்த நிலைமையை உடனடியாக மாற்றியமைக்க வேண்டும் எனவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இப்பாகமுவ விகாரையில் நடைபெற்ற வைபவம் ஒனறில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

நாட்டில் தற்போது குற்றச்செயல்கள அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. யுத்த காலத்தில் மக்களுக்கு இருந்த சுதந்திரம் தற்போது இல்லை. கொலைகள், கொள்ளைகள், ஆட்கடத்தல், பாலியல் வல்லுறவு, குண்டுவெடிப்புக்கள் என்பன தற்போது மிக வேகமாக அதிகரித்துக்கொண்டு போகின்றன.

எனவே இத்தகைய மோசமான நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க சகல மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, நாட்டில் உள்ள பல பாரிய தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதை சுட்டிக்காடடிய பிரதமர், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் உதவியுடன் இத்தொழிற்சாளைகளைப் புனரமைத்து மீள இயங்க வைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.(க-61)

## வாய்க்கால் தடுப்பணைகள் புனரமைக்கப்படவில்லை

(காரைநகர்)

காரைநகரில் மழைநீரில் வெளிச் செல்லும் வாய்க்கால் தடுப்பணைகள் புனரமைக்கப்படாமையினால் மழைநீர் முழுதும் கடலிற்குள் வழிந்தோடும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தரப்பில் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த வருடங்களிலும் பார்க்க பருவமழை குறைவடைந்துளள துடன், பெரும்போக நெற்செய்கை மேற்கொள்வதற்கே மழைநீர் போதாமையாக உள்ளது. அத்துடன், நீர்மட்டம் குறைவடைந்து செல்வதனால் பெரும்பாலான கிணறுகள் உவர்த்தன்மையாக மாற்றமடைந்தும் வருகின்றன.

இந்நிலையில், விவசாய வாய்க்கால்கள் புனரமைப்பதில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் அக்கறைகாட்டாத படியினால் இம்முறை மழைநீரினை தேக்கிவைக்க முடியாத துர்ப்பாக்கிய நிலைமை தோன்றியுள்ளது. இதனால், இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட நெற்பயிர்ச்செய்கைக் காணிகள் பாதிப்படையும் எனவும் விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ற-246)

## 524 வது படையணியகத்தில்

# படையினர்-மீனவர் சந்திப்பு முடிவுகள் ஏதும் எட்டப்படவில்லை

வடமராட்சிப் பகுதி மீனவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் குறித்து ஆராயும் முத்தரப்பு சந்திப்பொன்று கடந்த வெளளிகிழமை பருத்தித்துறையில் உள்ள 524வது படையணி தலைமையகத்தில இடம்பெற்றது.

கேணல் ரத்ன நாயக்கா தலைமையில் இடம்பெற்ற இச் சந்திப்பில் படைத்தரப்பினர், போர் நிறுத்தக் கடல் கண்காணிப்பாளர்கள் மற்றும் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் பங்குபற்றினர்.

இதில் மீனவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், பாஸ் நடைமுறை உட்பட பல்வேறு விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்ட போதும், முடிவு எதுவும் எட்டப்படவில்லை.

இச் சந்திப்பில் பல சங்கங்கள் புறக்கணித்த போதும் சில சங்கங்கள் மட்டும் பங்குபற்றியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ப-43)






நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற யாழ். மாவட்ட மனித உரிமைக்கான சுயாதீன முறைப்பாட்டு காரியாலய செயற்பாடுகள் சம்பந்தமாகவும், படையினரால் கைதாகி காணாமல் போனவரின் வழக்கு சம்பந்தமாகவும் விளக்கமளிக்கும் பத்திரிகையாளர் மாநாட்டில், கலந்துகொண்ட வடமாகாண இணைப்பதிகாரி சி.மோகன், தலைவர் கே.ஜி.சாக்கிய நாணயக்கார, செயலாளர் சாந்த டி.பத்தரன ஆகி யோரையும், இதில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:சிவசங்கர்)

# இடைக்கால நிர்வாகம் அமைக்கப்பட்ட பின்னர் நிதியுதவியை வழங்க வேண்டும்

## ஜப்பானிடம் கோரவுள்ளது தமிழ் காங்கிரஸ்

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் கட்சித் தலைமையகத்தில் தலைவர் அ.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மூன்று முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன அவை பின்வருமாறு,

வட-கிழக்கு பிரதேசம் உட்பட இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஜப்பான் அரசாங்கத்தினால் 263.9மில்லியன் டொலர் நிதியுதவி வழங்க உறுதியளிக்கப்பட்டிருப்பதாக தேசியப் பத்திரிகைகள் மற்றும் அரச தொடர் சாதனங்களில் இருந்து அறியமுடிகிறது. இது உண்மையானதாக இருப்பின் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்பட்டு, தமிழினம் கோரி நிற்கும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அமைக்கப்படும் வரை ஜப்பான் நாடு, வழங்க உத்தேசித்துள்ள நிதியுதவியை இடைநிறுத்தி வைக்குமாறு கோரி அந்த நாட்டுத் தூதுவாராலயத்துக்கு மகஜர் அனுப்புவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் காயங்கேணிப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்கேணல் பாவா மற்றும் புனர்வாழ்வுப் பொறுப்பாளர் லெப்கேணல் யோகா ஆகிய இருவரும் கொலை செய்யப்பட்ட சம்பவத்தினை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியானது வன்மையாகக கண்டிக்கின்றது. இதேபோன்று, கடந்த 7 ஆம் திகதி மட்டக்களப்பு பிரதேசத்தில் புல்லுமலை எல்லை நிலை மீது நடத்திய தாக்குதல் சம்பவத்தையும போர்நிறுத்தத்தைக் குழப்ப எடுக கப்பட்ட சதிவேலையாகவே அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கருதுகிறது.

தொடாந்தும் இவ்வாறான பொறுமையைச் சோதிக்கும் விஷமததனமான தாக்குதல் சம்பவங்கள் இடம்பெறுமானால் அது முழு இலங்கைத் தீவையுமே மிக மோசமாகப பாதித்துநிற்கும் என்பதை அரசுக்கு நேரடியாக சுட்டிக்காட்டுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழினத்தினதும், அவர்களது ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகளினதும் ஆழ்ந்த பொறுமையைச் சோதிக்காது, தமிழழ விடுதலைப்புலிகளிடம் வடக்கு-கிழக்கு பகுதிகளிற்கான இடைக்கால தன்னாட்சி அதிகார சபையினை வழங்குவதை அடிப்படையாகக் கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிகக வேண்டும். காலத்தை வீணே கடத்துவதனாலும், தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களை சல்லாபிப்பதனாலும், இந்த நாட்டிலே மீண்டும் ஒரு யுத்தத்தினை அரசாங்கம் தமிழ் மக்கள் மீது திணிப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதை நிறுத்திச் கொள்ள வேண்டும் எனவும இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(க)

# நல்லைக்கந்தன் தேர் வடம்பிடித்தால்

# எம் வல்வினைகள் யாவும் நீங்கிடுமே!

ச'வபூமி எனப் போற்றப்படும் ஈழவள நாட்டில், கந்தபுராண கலாசாரம் மிக்க யாழ்ப்பாணத்தின் நல்லூரில் கோயில்



கொண்டு வீற்றிருக்கும முருகப்பெருமான பல்லூர் மக்களுக்கும் அருள் சுரந்து கொணடிருக்கிறார்.

அருள் தரும் நல்லைக்கந்தன் அலங்காரக்கந்தனாக, கலியுக வரதனாக, சித்தர்கள் கண்கண்ட தெய்வமாக, சைவத்தமிழ் மக்கள் இடர் தீர்க்கும் குமரனாக, வீற்றிருந்து பொன்னான நேரம் தவறாத பூசைகள் நடைபெற, அழகுமிகு திருக்கோயிலில் அருளாட்சி செய்கிறார்.

நல்லைக்கந்தன் தேர்த்திரு விழாவானது மகோன்னதமான உற்சவம் என்று சொல்லப்படும் மஹோற்சவத்தின் சிகரமாக அமையும் திருவிழா ஆகும். சைவ சமயத்தின் எழுச்சிவிழா, சமுதாய ஒற்றுமையை உணர்த்தும் விழா.

அழகிய சித்திரத்தேரில் தேவியருடன் ஆறுமுகப் பெருமான் ஆரோகணித்து வருகின்ற தெய் வீக அழகுக்காட்சியை நாங்கள் காண்கின்றபோது எமது உள்ளத்து அழுக்குகள் அகன்று உள்ளம் தூயமையும், அழகும் பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்.

**கார்மயில் வாகனனை சாந்துணைப் போதும்**
**மறவாதவர்களுக்கு தாழ் வில்லையே**

என்பதை மெய்ப்பித்துக்காட்டவும், 'துதிப்போர்க்கு வல்வினை போம்' 'துன்பம்போம்' என்பதற் கேற்பவும் ஆறுமுகச் செவ்வேள் பெருமான் வள்ளி, தெய்வயானை சமேதராக பக்தர்களுக்கு அருள் மழை பொழிய இன்றையதினம் தேரேறி வருகிறார்.

அசையும் கோயிலாகவும், நடமாடும் மரச் சிற்பமாகவும், உயர்ந்த கலைச் செல்வமாக விளங்கும் தேரில மருவும் அடியார்கள் மனதில் விளையாடும் நல்லைக்கந்தன் ஆரோகணித்து வரும்போது, அப் பெருமானை நாங்கள் நாடி எங்கள் மனங்களை வெல்வோம்.

தேரின் இதயம் என்று சொல்லப்படும் பீடத்தில் முருகப்பெருமான் வீற்றீருந்ததும் தேர் ஓடுகிறது. எங்கள் இதயத்தில் முருகப்பெருமானை இருத்தினால் எங்கள் வாழ்க்கை என்ற தேர் சிறப்பாக ஓடும்.

தேர்த்திருவிழா அழித்தற் தொழிலைக் குறிக்கும், எமது உள்ளத்தில் உள்ள ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களையும், பேராசை, பொய், களவு, காமம் என்பவற்றையும் ஒடுக்கவே நல்லைக்கந்தன் தேரேறி வருகிறார்.

நல்லைக்கந்தனின் தேரின் கோபுரம் குவிந்து சென்று தேர்க் கலசத்தில் முடிய வெள்ளிக்குடை தெரிகிறது. எமது மனம் ஒருமித்த சிந்தனையுடன் முருகப்பெருமா னைத் தியானித்தால் அவரது அருட்குடை நிழல் நம்மை இன்னல்களிலிருந்து காக்கும்.

நல்லைக்கந்தன் தேர்த்திரு விழாவின் போது ஏராளமாகக் குவிக்கப்பட்ட தேங்காய்கள் சிதறிக்கப்படுகின்றனடுகின்றன. எங்கள் துன்ப துயரங்களை சிதறவைப்பதையும், தேங்காயின் கடின ஓடு உடைந்து வெண்மையான உட்பகுதியைத் தெரிவு செய்து மல நீக்கத்தைக் குறிப்பதாக உள்ளது.

நல்லைக்கந்தன் ஆலயத்தில் முருகப்பெருமானை நாடி பக்தர்கள் செல்வார்கள், ஆனால் தேர்த்திருவிழா அன்று பக்தர்களை நாடி முருகப் பெருமான் வருவார். இவ்வாறு பக்தர்களை நாடி வரும் முருகப்பெருமானை நல்ல மலரெடுத்து நல்ல மனதோடு நாம் பணிந்தால் அப்பெருமான் எங்களைத் தேற்றி சிந்தனை தெளிவிப்பார்.

முருகா! கலியுக வரதா! சரணம் சரணம் உன்பாதம் பணிந்தோம் சரணம்! என்று உள்ளம் உருகி அஞ்சலித்து நிற்கின்ற பக்தர்களுக்கு உள்ளத்தில் ஏதேனும் அச்சம் தோன்றுமாயின் உடன் ஆறுதல் வழங்கிக்காப் பாற்றவும், கொடிய போரில் ஈடுபட்டால் 'அஞ்சாதே! இதோ நான் இருக்கிறேன் என்று அபயமளிப்பதற்காக பக்தர்களின் அன்பு வெள்ளத்தின் மீது தேரில்

சைவப்புலவர்
*சி.நந்தகுமார்*

மிதந்து நல்லைக் கந்தன் வருகிறார்.

'நல்லைக்கந்தன் தேரின் வடம் பிடித்தால் முருகனிடம் நல்லதோர் இடத்தைப் பெற்றுக்கொள்ளலாம் எனப் பெரியோர்கள் சொல்லியதை எண்ணித் திருத்தேர் வடம் பிடித்தால், ஆண்மை, அழகு, செல்வம் எவரும் மதிக்கும் வளம் யாவும் பெருகும்.

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள அளப்பருங்கரணங்கள் நான்கும சிந்தையே ஆக நல்லைக் கந்தன் தேர்த்திருவிழாவைக் கண்குளிரக் கண்டு தரிசித்து, நாட்டில் அமைதியும், சாந்தியும் நிலவிட எமது அசுர குணங்களைப் போக்கி சகல செல்வங்களும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக. □

# ஆறுமுகப் பெருமானின் ஆறு முகங்களும் பன்னிருகைகளும் தரும் தத்துவம்

*நீர்வைமணி*

**ஆறுமுகங்கள்**

❋ உலகம் குற்றமற்று விளங்கப்பல ஒளிக்கதிர்களையும் தோற்றுவிப்பது - அழகுமுகம்

❋ அன்பர்கட்கு அவர்கள் வணங்கிக கேட்கும் நல்வரங்களை கொடுப்பது - அன்புமுகம்

❋ வேத நன்நெறியில் செய்யப்படும் யாகங்களிலே தீங்கு நேராவண்ணம் அருள்பாலிப்பது - அருள் முகம்

❋ வேத ஆகமங்களிலே மறைந்துள்ளவற்றை ஆராய்ந்து போதித்து எல்லாத் திசைகட்கும் சந்திரன் போல ஒளி வீசி நிற்பது - ஞான ஒளி முகம்

❋ பகைவர்களை வதைத்துப் போர்க்கள வேள்வியை வேட்பது - வீரமுகம்

❋குறமகள் வள்ளியோடு மகிழ்வுடன் வாழ்வில் மகிழ்ந்திருப்பது - இல்வாழ்வின் சிறப்பு

**திருமுருகாற்றுப்படைச் செய்யுள்.**

*மாயிருஞாலம் மறுவின்றி விளங்கப்*
*பலகதிர் விரிந்தன்று ஒரு முகம்*
*ஆர்வலர் ஒத்த அமர்ந்தினி ஒழுகி*
*காதலினுவந்து வரங்கொடுத் தன்றே ஒரு முகம்*
*மந்திர விதியின் மரபுளிவழாஅ*
*அந்தணர் வேற்றி ஓர்க்கும்மே ஒரு முகம்*
*எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்*
*திங்கள் போலத்திசை விளங்குமே ஒரு முகம்*
*செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கி*
*கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே ஒரு முகம்*
*குறவர் மறமகள் கொடிபோல் நுசிப்பின்*
*மடவார் வள்ளியொரு நடையமர்ந் தன்றே*

**பன்னிருகைகள்**

*விண்செலன் மரபினையர்க் கேந் தியது ஒருகை*
*ஒத்தாசை ஊக்கம் சேர்த்துவது ஒரு கை*
*நலம் பெறும் கலிங்கத்துக் குறங்கின் மீசை அசை இயது ஒருகை*
*அங்குசம் கடாவ ஒருகை*
*ஐயிருவட்டமொடு ஏ∴குலம் திரிப்ப இருகைகள்*
*மார் பொடுவிளங்க ஒருகை*
*தாரொடுபொகிய ஒருகை*
*கீழ்: வீழ் தொடியோடு மீமிசைக் கொப்ப ஒருகை*
*பாடின் படுமணியிரட்ட ஒருகை*
*நீள் நிற விசும்பின் மலிதுளிபொழிய ஒருகை*
*வாளா மகளிர்க்கு வதுவை சூட்ட ஒருகை*

தேவர்களையும் முனிவர்களையும் பாதுகாக்க ஒருகை

முதலாவது கைக்கு ஒத்தாசை புரிவது இரண்டாவது கை, அங்குசத்தைச் செலுத்துவது மூன்றாவது கை, ஆடை உடுத்திய தொடையைத் தாங்குவது ஒருகை, அழகிய பெரும் பரிசையோடு விளங்குவது ஒருகை, வேலாயுதத்தைச் சுலபமாகச் சுற்றுவது ஆறாவது கை, முனிவர்களுக் விளக்க முடியாத ஐந்தெழுத்து மந்திரத்தை உணர்த்து மார்போடு சேர்ந்து விளங்கு வது ஏழாவதுகை, மார்பில் அழ குறத் தாழ்ந்து விளங்கும் மாலையுடன் சேர்ந்து விளங்குவது எட்டாவது கை, வளைகளுடனே மேலே சூழன்று வேள்வியை வேட்கும் முத்திரை கொடுப்பது ஒன்பதாவது கை, ஏற்றாற் போல மணியை ஒளிக்கச் செய்வது பத்தாவதுகை, மழையைப் பெய்விப்பது பதினொன்றாவது கை, தெய்வப் பெண்களுக்கு மண மாலை சூட்டுவது பன்னிரெண்டாவது கை, ஆகப் பன்னிருகரங்களும் வாழ் வியற் தத்துவங்களை விளங்க வைப்பதாய் உள்ளன.

## கலந்துரையாடல்

(கல்வியங்காடு)

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி முதலாம் வருட முகிழ் நிலை ஆசிரிய மாணவர்களின் பெற்றோர், பாதுகாவலர் களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் முக்கிய பல விடயங்கள் கலந்துரையாடப்பட இருப்பதால் பெற்றோர், பாதுகாவலர்கள் தவறாது இதில் கலந்து கொள்ளுமாறு பீடாதிபதி தி.கமலநாதன் கேட்டுள்ளார். (ப-74)

## 3 தசாப்தமாக திருத்தப்படாத வீதிகள்

(கல்வியங்காடு)

நயினை தீவில் உள்ள வீரபத்திரர் வீதி, பிள்ளையார் வீதி, முருகன் வீதி போன்ற பிரதான வீதிகள் கடந்த மூன்று தசாப்த காலமாக திருத்தப்படாது காணப்படுகின்றன.
கென்ய அணியைப் பொறுத்தவரை அதற்கு இந்திய அணி உதிரிகளாக 42ஓட்டங்களைக கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் ஹர்பஜன் சிங் 33ஓட்டங்களுக்கு 3விக்கெற்றுக்களையும், இர்பான் பதான் 11ஓட்டங்களுக்கு 2விக்கெற்றுக்களையும் அஜித் அகார்கர் 42 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெற்றையும் வீழ்த்தினர்.

(ற-7,121)

## யு-எஸ்-ஓபன் அரையிறுதியில் ரஷ்ய வீராங்கனைகள் ஆதிக்கம்

யு.எஸ். ஓபன் டென்னிஸ் போட்டிகளில், பெண்கள் அரையிறுதிச் சுற்றுப் போட்டிகள் நடைபெற்றன.

முதல் போட்டியில், 1998ல் சம்பியன் பட்டம் வென்ற அமெரிக்காவின் டேவன்போர்ட், ரஷ்யாவின் ஸ்வெட் லானா குஸ்னெட்சோவாவை எதிர்த்து விளையாடினார். அனுபவ வீராங்கனையான டேவன் போர்ட் முதல் செறறில் ஆதிக்கம் செலுத்தினார். இவர், 6.1 என்ற முன்னிலைவயில் முதல் செற்றை எளிதில் கைப்பற்றினார். அனால், அடுத்தடுத்த செற்களில் குஸ்னெட்சோவா அபாரமாக விளையாடினார். இவரது விரைவான அடிகளை எதிர்கொள்ள முடியாத டேவனபோர்ட் 2.6 4.6 என அடுத்த இரண்டு செற்களிலும் தனது தோல்வியை ஒப்புக் கொண்டார்.

இதன் மூலம் குஸ்னெட் சோவா 1.6 6.2 6.4 என்ற செறகளில் டேவன் போர்ட்டை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். மற்றொரு அரையிறுதிப் போட்டியில், அமெரிக்காவின் கேப்ரியாட்டி, ரஷ்யாவின் எலீனா டெமன்டிவாவை எதிர்த்து விளையாடினார். காலிறுதியில் முன்னணி வீராங்கனையான செரினா வில்லியம்சை வீழ்த்திய கேப்ரியாட்டி சிறபபான நிலையில் இருந்தார்.

ஆனாலும் முதல் செற்டில் இவரால் ஒரு போட்டியைக் கூட கைப்பற்ற முடியவில்லை. டெமனடிவா 60என்ற முன்னிலையில் முதல் செற்றை எளிதில வென்றார் கேப்ரியாட்டி இரண்டாவது செற்றை 6:2 என்ற முன்னிலையில கைப்பற்றினார். வெற்றியை நிர்ணயிக்கும் மூன்றாவது செற்றில் கடும் போட்டி நிலவியது. அதில் டெமன்டிவா 7-6 என்ற முன்னிலையில் வெற்றி பெற்றார். கேப்ரியாட்டி 0-6, 6-2,6-7 என்ற செற்களில் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். இதன் மூலம் பிரேஞ்சு ஓபனைத தொடர்ந்து யுஎஸ் ஓபனிலும் முதன முறையாக இரு ரஷ்ய வராங்கனைகள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

கடந்த மே மாதம் நடந்த கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்ச் ஓபனில் ரஷ்ய வீராங்கனைகளான அனஸ்டா சியா மிஸ்கினா, எலீனா டெமன்டிவா இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றனர். இதில் மிஸ்கினா வெற்றி பெற்று சம்பியன் பட்டம் கைப பற்றினார். பிரெஞ் ஓபனில் சாம்பியன் பட்டத்தை தவறவிட்ட டெமன்டிவா, இம்முறை வெற்றி பெறு வாா என எதிர்பார்க்கப்படுகிறது.

(ற-7)

ஐ.சி.சி.கிண்ணப் போட்டிகளில் இன்று அவுஸ்திரேலியா அமெரிக்க அணிகள் மோதுகின்றன.

வட்டுக்கோட்டை அராலி மேற்கு

# கோட்டைக்காடு நொச்சியம்பதி சித்திவிநாயகர் ஆலய

# தேர்த்திருவிழா சிறப்புமலர் -13.09.2004




## தலைவரின் ஆசியுரை

திருமூலராற் "சிவபூமி" எனச் சிறப்பிக்கப்பட்ட ஈழ வள நாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தின் மேற்கே சைவமும் தமிழும் தழைத்தோங்கும் கோட்டைக்காடு நொச்சியம்பதி விநாயகப் பெருமானின் இரதோற்சவம் வழமை போல் இன்றும் சிறப்புற நடைபெறுவதையிட்டுப் பேருவகை அடைகிறேன்.

விநாயகப் பெருமானின் இரதபவனி மூலம் இந்த ஊருக்கும், தேசத்துக்கும், உலகுக்கும் நல்லொளி கிடைக்கவும் பாரெங்கம் அன்பும், சமாதானமும் செழிக்கவும் பிரார்த்திப்போமாக

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக
உலகமெல்லாம்."

*தலைவர்,*
*ஆலய பரிபாலன சபை.*



அருள்மிகு நொச்சியம்பதி சித்திவிநாயகர்

**மலரமைப்பு:**
உருத்திரபரமேஸ்வரன் பாலமுருகன்
(வட்டுக்கோட்டைச் செய்தியாளர்)

## ஆன்மாக்களுடைய விக்னங்களை முழுமையாக நீக்கும் ஆலயமாக மிளிரட்டும்

"பொன்னாமை, பிரம்பு, தேசிக்காய்" என திருவருட் சிறப்புக்கள் தொடர்புடைய பொன்னாலை வரதராஜப் பெருமாள், நொச்சியம்பதி விநாயகர், அராலி ஆவரசம் பிட்டி முத்துமாரியம்பாள் ஆலயங்கள் இவை மூன்றும் வரலாற்றுத் தொடர் புகழுடையதாக ஐதீகம். விக்னங்கள் நீங்கும் விநாயக வழிபாடு இன்றேல் வேறெவ்வழிபாடுகளும் பயன்தரமாட்டா. அஃது ஆகம நியதியாகும். அந்த வகையில் அராலி மேற்கு கோட்டைக்காடு பகுதியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானும் விக்னங்கள் நீக்க நொச்சியம்பதியிலிருந்து திருவருள் பாலித்துக் கொண்டிருக்கின்றார்.

ஆலயம் என்பது இறைவனது திருவருட் சிறப்பினால் ஆன்மாக்கள் லயப்படுகின்ற இடமாகும். அங்கு ஆன்மாக்களிடையே வேறுபாடுகள் எவையும் நோக்கற்படலாகாது. ஆன்மாக்கள் லயப்படுவதானது இறைவழிபாடு என்பதை மட்டுமல்லாது, துயருறும் ஏழைகளுக்கான சமூகப் பணிகள் உதவிகள் வழங்கி அவர்களது வாழ்க்கை நிலையை உயர்த்துதல், பசியால் வாடிவருவோருக்கு அன்னதானம், தாகத்துக்கு தண்ணீர் என்பவை வழங்குதல், தெய்வீக அறிவினை ஊட்டும் வகையிலான அறநெறி வகுப்புக்களூடான அறநெறிப் போதனைகள், சிறுவர் முதியோர் இல்லங்கள் வாழ்வியற் கலைகளை மேம்படுத்தும் வகையிலான பண்ணிசை, சங்கீதம், நடனம் போன்ற பயிற்சிகள் என்பவற்றையும் உள்ளடக்கியதாக அமையும் போதே ஆலயங்கள் முழுமை பெறுவதாக அமையும்.

பண்டைய சைவத்தமிழ் அரசர்களது காலத்தில் ஆலயங்களும் ஆலயங்கள் சார்ந்த குடியிருப்புக்கள் கிராமங்களும் இவற்றையே பறைசாற்றி நின்றன. அந்த வகையில் திருவருள் மிகு நொச்சியம்பதி விநாயகப் பெருமானது மாகோற்சவ இரதோற்சவ நன்நாளில் இவ் ஆலயமும் விக்னங்களை நீக்கும் முழுமையான அம்சங்களைப் பெற்ற ஒரு ஆலயமாக மிளிர விக்னம் நீங்கும் விநாயகப் பெருமானது திருவருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

*சிவதர்மவள்ளல் சி. சச்சிதானந்தம்,*
*பொறுப்பாளர், கோகுலம் கோமாதா*
*அறநெறிப் பாடசாலைகள்*
சச்சியா இரும்பகம்,
தெல்லிப்பழை வீதி,
வட்டுக்கோட்டை.

## நொச்சியம்பதி சித்தி விநாயகர் தேர்ஏறி வருகிறான்



ஒரு சந்தியில் வேம்பும் அரசும் இருந்தால் போதும் அங்கே அருள் வழங்கும் கடவுளாக எழுந்தருளி அருள் பாலிப்பவர் விநாயகர்.

சைவத்தின் முதல் வணக்கத் தெய்வம். எல்லாத் தெய்வ வழிபாடுகளும் ஓம் என்னும் பிரணவத்தின் ஒடுக்கம். பிரணவ - ஓம் வடிவாக விளங்குபவர் விநாயகர்.

ஒலிகளுக்கெல்லாம் மூலமுதலாக விளங்குவது பிரணவம் எனும் ஓங்காரம். இது இறைவனிடத்தில் தோன்றிய முதல் நாதம். இந்த "ஓம்" என்ற ஓங்காரத்தின் வரிவடிவமே விநாயகரின் உருவம். மேல் சுழி இருக்குமிடம் விநாயகரது ஒடிந்த கொம்பு இருக்குமிடம். அது அங்கிருந்து வலது கைவழியாக மேலேறி கிரீடத்தைச் சுற்றி இடக்கை பாசம் வரை வந்து வளைந்து நெற்றிப் பொட்டுவரையிலும் சென்று துதிக்கை வழியாக கீழ் இடக்கை வரை வந்து கால் வரை இறங்குகிறது. இடக்கையும் அதிலிருக்கும் மோதகமும் "ம்" என்பதை குறிக்கின்றது.

விநாயகரின் திருவுருவம் பற்பல அற்புத தத்துவ நுட்பக் கருத்துக்களை உலகிற்குப் பறைசாற்றுகின்றது. வட்டுக்கோட்டை, அராலி, கோட்டைக்காட்டுப் பகுதியில் அற்புதம் நிறைந்த விநாயகராக சிறிய மூர்த்தியாக தலம் நொச்சியம்பதியாக, விருட்சம் - நொச்சிமரம், தீர்த்தம், காவேரி, புஸ்கரணி என்ற சிறப்புக்களுடன் நொச்சி மரங்களின் தென்றல் தாலாட்ட சித்தி விநாயகராக வீற்றிருந்து நொச்சியம்பதி கிராமத்தை அருள் ஆட்சி செய்கிறார் சித்திவிநாயகர். பஞ்சவிநாயகர் முகூர்த்தம் - தாங்கி இன்று தேர் ஏறிவரும் காட்சி கருணையுடன் கூடிய அருட்காட்சியாகும்.

நொச்சியம்பதி விநாயகர் இப்பகுதி மக்களின் ஒரே வழிபாட்டு தெய்வமாகும். இதனால் இவ்வாலயம் வருடா வருடம் புதுப்பொலிவுடன் பல திருப்பணிகள் புதிதாகச் செய்யப்பட்டு பூரண பொலிவுடன் விளங்குகின்றது.

மகோற்சவப் பெருவிழாக்கண்டு சித்திரத் தேர் ஏறி விழாக்காணும் நொச்சியம்பதி விநாயகரை விக்கினங்கள் நீங்க போற்றித் துதிப்போம்.

விநாயகர் நாம் வேண்டும் வரங்களை எல்லாம் தரவல்லவர். நாம் செய்கின்ற செயல்கள் அனைத்தையும் வெற்றியாக்கவல்லவர். நம் பெரு மையை உயரச் செய்ய வல்லவர். நம் உடல் நலம் காக்க வல்லவர்.

எல்லா வல்லமைகளும் பொருந்தியவரும் எளியவருமாக நொச்சியம்பதியானை தேரில் கொலுவிருந்து பவனிவரும்வேளை வணங்கி வளமும் நலமும் பெறுவோம்.

*வேதாகம சிவ சுரபி சிவஸ்ரீ*
*கலாநிதி து. கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் (J.P)*
*(புன்னாலைக்கட்டுவன்)*

*விநாயகரின் அருள் இவ்வுலகெங்கும் பரவி சமாதானம் ஏற்படவேண்டும்*
**நொச்சியம்பதி பல்பொருள் அங்காடி**
தெல்லிப்பழை வீதி வட்டுக்கோட்டை
சங்கரத்தைச்சந்தி

*நொச்சியம்பதியான் ரதபவனி நாட்டில் சாந்தியும், சமாதானமும் ஏற்பட வேண்டி நிற்கின்றோம்.*
**அம்பாள் ஸ்ரோஸ் (பேபி கடை)**
Shell Gas விநியோகஸ்தர்கள்
அரசடி வீதி வட்டுக்கோட்டை

**சச்சியா இரும்பகம்**
சகலவிதமான நிறப்பூச்சுக்களையும் பெற்றுக்கொள்ளலாம்
தெல்லிப்பழை வீதி வட்டுக்கோட்டை

*தேர் ஏறும் நொச்சியம்பதியான் அருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்*
**R.S.T. அரிசி ஆலை**
தெல்லிப்பழை வீதி மாவடிச் சந்தி

**சீமாட்டி புடைவையகம்**
122, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்

**ஒளிக்கதிர் அழகுமாடம்**
தெல்லிப்பழை வீதி
சங்கரத்தைச்சந்தி

## இன்று ஒரு தகவல்

### வாழ்வைக் கொண்டாடுவோம்

ஒருவர் தனியே உட்கார்ந்து சிரித்துக் கொண்டிருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவரைப் பற்றி என்ன நினைப்போம் "நேற்று வரைக்கும் நன்றாகத் தானே இருந்தார். இன்று என்ன ஆனது? இப்படித்தனியாக அமர்ந்து சிரிக்கின்றரே" என்று நினைப்போம். ஆனால்... அவசரப்பட்டு அப்படி ஒரு முடிவுக்கு வருவதும் தவறு. ஏனென்றால் சில ஞானிகளும் அப்படிச் சிரிப்பது உண்டு.

ஜப்பானில் ஹோட்டே என்று ஒரு ஞானி இருந்தார். எப்போதும் சிரித்துக்கொண்டே இருப்பார். வேறு எதுவும் பேசமாட்டார். அவருக்கு "சிரிக்கும் புத்தர்"என்று தான் பெயர். சீனாவில் மூன்று ஞானிகள் இருந்தனர். மூன்று பேருக்கும் சிரிக்கும் சந்நியாசிகள் என்றே பெயர். ஏனென்றால் அவர்களின் உண்மையான பெயர் என்னவென்று யாருக்குமே தெரியாது.

அந்த மூன்று பேரும் என்ன செய்வார்கள் என்றால் எப்போது பார்த்தாலும் சிரித்துக்கொண்டே இருப்பார்கள். ஊர் ஊராகப் போய் சிரிப்பார்கள். இவர்கள் ஏன் சிரிக்கிறார்கள்? எதற்கு சிரிக்கிறார்கள்? என்று புரியாமல் சுற்றி நின்று எல்லோரும் வேடிக்கை பாரபபார்கள். கொஞ்ச நேரத்தில் அவ்களும் மெதுவாகச் சிரிக்க ஆரம்பித்துவிடுவார்கள். அதன் பின் அந்த இடம் ஒரே சிரிப்புமயமாகி விடும்.

யாராவது அவர்களிடம் போய் எங்களுக்கு ஏதாவது சொல்லுங்கள் என்று கேட்டால் நாங்கள் உங்களுக்குச் சொல்வதற்கு ஒன்றுமில்லை நாங்கள வெறுமனே சிரிக்கினறோம். இப்போது இந்தச் சூழ்நிலையைச் சிரிப்பாக, மகிழ்ச்சியானதாக மாற்றுகிறோம் அவ்வளவுதான என்பார்களா. ஒரு முறை ஒரு கடைத் தெருவில் வந்து நின்று அந்த மூன்று பேரும் சிரித்திருக்கிறார்கள். கொஞ்ச நேரத்தில் அவர்களைப் பார்த்து எல்லோரும் சிரிக்க ஆரம்பிததார்கள். அதற்கு முன்பு அந்த இடத்தில் நிறைந்திருந்தது மன இறுக்கம்,பணம்,பேராசை,ஏமாற்றுவேலை. இப்போது அந்த இடம் முழுவதும் சிரிப்பு...மகிழ்ச்சி...

படிக்காத அந்த மூன்று சந்நியாசிகளும் சீனா முழுவதும் போய் மக்களை மகிழ்ச்சியாக இருக்கும் படி செய்தார்களாம். ஒரு கிராமத்தில் அவர்கள் இருக்கும் போது அந்த மூன்று பேரில் ஒருவர் இறந்துவிட்டார். இப்போது எப்படி அவர்கள் சிரிக்கப்போகிறார்கள் எனறு பார்க்கலாம் என மக்கள் ஆவலுடன் அங்கே போய்ப் பார்த்தார்கள்.

அங்கே போய்ப பார்ததால் இறந்து கிடந்த சந்நியாசியின் உடலைச் சுற்றி மற்ற இரண்டு பேரும் ஆனந்தமாக ஆடிக் கொண்டிருந்தார்களாம். "என்ன இது பைத்தியக் காரத்தனம் அவர் இறந்து கிடக்கிறார். நீங்கள்ஆடிக் கொணடிருக்கிறீகளே?" என்று கோட்டர்கள். "அப்படி இல்லை. நாங்கள் மூன்று பேரும் உயிருடன் இருந்த போது யார் முதலில் இறக்கப்போகிறோம் என்று பேசிக் கொளவோம்.

இப்போது இவர் அதில் ஜெயித்து விட்டார். நாங்கள எப்போதும் சிரித்துக் கொண்டே வாழ்ந்தோம். இப்போது எங்கள் நண்பரை எப்படி வழி அனுப்புவது?

எப்படி வாழ்ந்தோமோ அப்படித்தானே வழி அனுப்ப வேண்டும்? அது தான் சிரித்து மகிழ்ச்சியுடன் வழி அனுபபுறோம். நாங்கள் அவர் இறந்ததாகவே நினைக்கவில்லை. "வாழ்வுக்கு ஏது சாவு?" என்றார்களாம் அதன் பின்பு அவரைச் சுடுகாட்டுககுக கொண்டு போவதற்கு முன்பு குளிப்பாட் வேண்டுமென மக்கள் சொல்லியிருக்கின்றனர். அது முடியாது ஏனென்றால் எங்கள் நண்பர் தான் இறந்தால் குளிப்பாட்டாமல் அப்படியே இருக்கின்ற ஆடையோடு சிதையில் வைத்துக் கொளுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார் என்றனர். அப்படியே கொண்டு போய்க் கொளுத்தினார்கள்.

நெருப்பை வைத்ததும் ஒருபெரிய ஆச்சரியம் அந்த சிதையில் இருந்து நிறைய வெடிச்சத்தங்கள். வர்ண ஒளிகள், வாணவேடிக்கைகள் அந்த சந்நியாசி தான் சாவதறகு முந்தி தனது உடையில் யாருக்கும் தெரியாமல் பட்டாசுகளையும் மத்தாப்புக்களையும் மறைத்திருக்கிறார். அப்போது மக்கள் அந்த வேடிக்கையைப் பார்த்து சிரிக்க ஆரம்பித்துவிட்டார்களாம். அந்த இரண்டு சந்நியாசிகளுடன் சேர்நது அவர்களும் ஆட ஆரம்பித்து விட்டார்களாம்.

இறப்பு என்பது உண்மையில் இறப்பு அல்ல. அது புதிய வாழ்வின் ஆரம்பம். அதைக் கொண்டாடி மகிழ வேண்டும். இது ஒரு ஞானியின் கருத்து. இறப்பு வரும் போது அதை மகிழ்ச்சியாக வரவேற்கும் மனப்பக்குவம் வந்துவிட்டால் இறப்பு கூடத் தனது கொல்லும் சக்தியை இழந்துவிடும். அதற்குப் பதிலாக நீங்கள் அதைக் கொன்று விடுகிறீர்கள் என்கிறார் அவர்.

இதலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவெனறால் 'வாழ்க்கை வாழ்வதற்காக' என்று இதுவரையில் சொல்லிக் கொண்டிருந்தோம். இனிமே எப்படிச் சொல்ல வேண்டும் தெரியுமா? வாழ்க்கை வாழ்வதற்காக மட்டுமலல வாழ்க்கை வாழ்விப்பதற்காக, கொண்டாடுவதற்காக. இன்று முதல் வாழ்க்கையைக் கொண்டாடக் கற்றுக் கொள்வோம்.

ஒருவர் வந்தார். தலையில் பெரிய கட்டு. "தலையில் என்ன சார் கட்டு?" என்றேன். "எங்கள் வீட்டில் வாழைப் பழத்தோல் வழுக்கி கீழே விழுந்துவிட்டார் மனைவி" என்றார். "விழுந்தது மனைவிதானே. அதற்கு நீங்கள் ஏன் கட்டுப் போட்டிருக்கிறீர்கள்? " என்றேன். "அவர் விழுந்ததைப் பார்த்து நான் வாய்விட்டுச் சிரித்துவிட்டேன். அதன் பலன் தான் இது" என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# எம்மீது வலிந்து போர் திணிக்கப்பட்டால் அதனை எதிர்கொள்ள தயாராகவுள்ளோம்

## சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**எங்கள் மீது போர் வலிந்து திணிக்கபபட்டால் அதனை எதிர்கொள்ள நாம் எப்போதும் தயாராகவே உள்ளோம் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்துள்ளார்.**

றொய்ட்டர் செய்தி ஸ்தாபனத்துக்கு கடந்த வெள்ளிக் கிழமை கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் ஏற்கனவே இலங்கை அரசுடன் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காகப் பல சமாதானப் பேச்சுக்களை முன் னெடுத்து இருக்கின்றோம்.

நாங்கள் மட்டுமல்ல கடந்த காலங்களில் எமது தமிழ்த் தலைவர்களும் பல முயற்சிகளை மேற்கொண்டு பல ஒப்பந்தங்களையும் செய்துள்ளார்கள்.

அவர்கள் செய்துகொண்ட ஒப்பந்தங்களும் பேச்சுக்களும் இல்லாமல் செய்யப்பட்டதும்,கிழித்தெறியப்பட்டதும் வரலாறுகளாகவே இருக்கின்றன.

எங்களுடைய மக்கள் நிரந்தரத் தீர்வு முயற்சியில் களைத்துப் போய்விட்டார்கள். அதற்கான முடிவுகள் எவையும் எடடப் படாத நிலையில்தான் அதற்கான முடிவுகள் உருவாக்கப் படும் வரை இடைக்கால நிர்வாகம் ஒன்றை நிறுவ வேண்டும் என்ற அடிப்படை நிலை உள்ளது.

எமது மக்கள் இறுதியாக நடைபெற்ற தேர்தலில் தமது



ஆணையை வெளிப்படுத்தி இருக்கின்றார்கள். எங்கள் மீதான போர் வலிந்து திணிக்கப்படும் போது அதனை எப்போதும் எதிர்கொள்ளத் தயாராகவே உள்ளோம். போரை எவரும் விரும்பவில்லை. ஒட்டுமொத்த தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளும் ஒரே நிலைப்பாட்டில் தான் உள்ளனர். போர் எம்மீது திணிக்கப்படடால் தான் நாம் போரினை எதிர்கொள்வோம் எனறார்.

அத்துடன், கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுவரும் வன்முறைகளை அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் அவ்வாறு அவை தடுத்து நிறுத்தப்படாது விட்டால் மீணடும் ஓர் யுத்தம் உருவாகுவதற்கு இவ் வன்முறைகள இடமளித்து விடுமெனவும் சு.ப.தமிழச்செல்வன் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஆட்சிக் காலத்தில் இத்தகைய வன்முறைகள் அரிதாகவே இடம்பெற்றதாகவும் தற்போது இவை வேகமாக அதிகரித்துச் செல்வதாக வும் அவர் மேலும் கவலை தெரிவித்தார். (க)

# பிறேமதாசவின் கொலையுடன் புலிகள் சம்பந்தப்பட்டிருக்கும் வாய்ப்புக் குறைவு

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி பிறேமதாசவின் கொலையுடன் தழிழீழ விடுத்லைப் புலிகள் சம்பந்தப்பட்டிருப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படுவதாக பிறேமதாசவின் வெளிநாட்டு ஆலோசகராக விளங்கிய பிரட்டன் வீரக்கோன் தகவல் வெளியிட்டுள்ளார். 1993 ஆம் ஆண்டு இடம்பெற்ற மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த பிரேமதாச கொழும்பு ஆமர் வீதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார்.

விடுதலைப்புலிகளின் அமைப்பைச் சேர்ந்தவரும், பிரேமதாசவுக்கு நெருக்கமானவருமான பாபு என்பவரே பிறேமதாச மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டிருந்ததாகப் பொலிஸாரும், ஊடகங்களும் அப்போது செய்தி வெளியிட்டிருந்தன. ஆனால், பிரேமதாசவின் காரியாலயத்துக்குத் தாம் அடிக்கடி சென்று வந்தபோதும், பிரமதாசவுக்கு நெருக்கமானவர் எனக் கூறப்பட்ட பாபு என்பவரைத் தாம் கண்டதோ, பார்த்ததோ கிடையாது என பிரட்மன் வீரக்கோன தற்போது தகவல வெளியிட்டுள்ளார்.

அத்துடன்,அவரை யார் கொலை செய்தார்கள் என்பது இன்னமும் புரியாத ஒரு புதிராகவே இருந்து வருவதாகவும் பிரட்மன் வீரக்கோன் மேலும் குறிப்பிட்டுள்ளார். (க-121)

## இராசி பலன்

**13.09.2004**

**(ஆவணி 28, திங்கட்கிழமை)**

**சதுர்த்தசி மு.இ 8.34 மணிவரை**

**மகம் மரண மாலை 5.47 மணி வரை**

**இராகுகாலம் 7.33 - 9.03 மணி வரை**

**சுபநேரம் 12.03-1.33 மணிவரை**

**கரிநாள்**

**மேடம்**
ஆரோக்கியக்குறைவு, காரிய தாமதம், தொழில் நன்மை, மனச்சோர்வு.

**இடபம்**
வீண் பயம், மாதாசுகம், போசன நன்மை, எடுத்தகாரியம் தாமதம்.

**மிதுனம்**
சத்துருஜெயம், தடைப்பட்டகாரியம் கைகூடும், பிரயாண நன்மை, உறவினர் சந்திப்பு.

**கடகம்**
காரிய சாதனை, வஞ்சகம் ,தனவிரயம், வீண் விவதாம்.

**சிங்கம்**
செல்வாக்கு,நல்ல முயற்சி, விருந்துபசாரம், ஆழ்ந்த சிந்தை.

**கன்னி**
நண்பர்விரோதம்,முயற்சி தாமதம், பிரயாணம், மனக்கிலேசம்.

**துலாம்**
குதூகலம், காரிய சித்தி, நல்ல மனைவாசம், மேன்மை.

**விருச்சிகம்**
புதிய திட்டமிடல், முயற்சி பலிதம், அதிகாரம், தொழில் நன்மை.

**தனுசு**
குடும்பசுகம், காரிய தாமதம், பிரயாணம், பித்த ரோகம்.

**மகரம்**
பெரியோர் வெறுப்பு, வாகன பயம், தர்மம்,முயற்சி தாமதம்.

**கும்பம்**
காரிய சித்தி, புதிய பொருள் சேர்க்கை, நல்ல வருமானம், மனச்சோர்வு.

**மீனம்**
தேக ஆரோக்கியம், காரிய சித்தி, செய்தொழிலில் விருத்தி மனமகிழ்ச்சி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

# வரவு- செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வு உள்ளடக்கமா?

## எதிர்பார்க்க வேண்டாம் என்கிறார் லால்காந்த

(கொழும்பு)

தாம் தற்போது எதிர்க்கட்சியில் இருந்திருந்தால் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுக்கு எதிராக வீதியில் மக்களையும் தொழிற்சங்கங்களையும் இறக்கி போராட்டம் நடத்தியிருப்போம் என்று அமைச்சரும்,ஜே.வி.பியின தொழிற் சங்கத் தலைவருமான கே.டி. லால்காந்த தெரிவித்தார். தற்போது அதனை ஐக்கிய தேசியக் கட்சி ஏன் செய்யவில்லை என்று அவர் பரிகாசம் செய்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் வரவு-செலவுத் திட்டத்தில் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என அறிவித்துள்ளது. எதிர்வரும் நவம்பர் மாதம் வெளியிடப்படும் வரவு-செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வு தொடர்பாக எதிர்பார்க்க வேண்டாம். அதனுடைய வரவு- செலவுத் திட்டத்தில் போதியளவு சம்பள அதிகரிப்பை வழங்கவில்லை.

பெறறோலியக்கூட்டுத்தபானத்தின் பங்குகளை வேறு கட்சிகளுக்கு விற்க விடமாட்டோம் இதனை அரசாங்கத்திற்குள்ளேயே தர்த்துக் கொள்வோம் .

ஐக்கிய தேசியக்கட்சியைப் போலல்லாது நாம் எமது வரவு-செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வை வழங்குவோம் அதுவரையும் எந்த சம்பள உயர்வையும் எதிர்பார்க்க வேண்டாம் எனவும் லால்காந்தா மேலும் தெரிவித்துள்ளார். (ற-6)

## கனடா பொங்குதமிழ் நிகழ்வுக்கு

# கூட்டமைப்பு எம்.பிக்கள் நால்வருக்கு அழைப்பு

(திருநெல்வேலி)

எதிர்வரும் 25 ஆம் திகதி ககடாவில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நால்வருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுளளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன்,ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,திருமதி பத்மினி சிதம்பரநாதன் மற்றும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் சிதம்பரநாதன் ஆகியோருக்கே இவ் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-43)

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல் - குறள்

வலம்புரி

# வீதி திருத்தத்தில் அக்கறை தேவை

யுத்த சூழ்நிலை ஏற்பட்ட கடந்த 20 வருட காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாடு எத்தனையோ விடயங்களில் பின்தங்கிப்போயுள்ளது. கல்வி, சுகாதாரம், போஷாக்கு, குடியிருப்பு என்றவாறு பெரியதொரு பட்டியலை இங்கு தயாரித்துவிடமுடியும்.

மேற்கூறப்பட்ட விடயங்களுக்கு அப்பால் யாழ். குடாநாட்டிலுள்ள வீதிகளின் நிலை மிகவும் மோசமாகவுள்ளது. யுத்தத்தினால் சீரழிந்துபோன வீதிகள் என்பதோடு, யுத்தத்திற்கு முன்னரே சீரழிந்த வீதிகளின் நிலைமை சொல்லுந்தரமன்று. அதாவது இலங்கையின் சுதந்திரத்திற்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட பல வீதிகள் சுதந்திரத்திற்குப் பின்னர் இதுவரை "தாரை" காணாமலுள்ளன.

தற்போது வீதி திருத்தம் என்ற பேச்சு பிரதான வீதிகளையும், உயர் அதிகாரிகள் குடியிருக்கின்ற வீதிகளையுமே குறிப்பதாக உள்ளது. ஆனால் தீவகம், வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி மற்றும் வலிகாமம் போன்ற இடங்களில் உள்ள பல்வேறு வீதிகள் எந்த வீதித் திருத்தமும் இன்றி குண்டுங்குழியுமாகக் காட்சிதருகின்றன. இதனால் வீதி விபத்துக்கள் மலிந்துபோயுள்ளன.

கிராமங்களில் உள்ள வீதிகள் மிகவும் மோசமாகச் சீரழிந்து இருப்பதால் விவசாயிகள் தமது முயற்சியை முன்னெடுக்கமுடியாமல் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கிராமப்புறங்கள் என்பதால் அப்பகுதியில் உள்ள வீதிகள் குறித்துப் பிரதேச சபைகளோ, அரச அதிகாரிகளோ அக்கறைகொள்ளாமல் இருப்பது மிகவும் அபத்தமான செயலாகும்.

கல்வி, சுகாதாரம், போக்குவரத்து ஆகிய துறைகளினூடாக கிராமங்களை முன்னேற்றமடையச் செய்வதன் மூலமே அபிவிருத்தி என்ற எண்ணக்கருவை முழுமைப்படுத்தமுடியும். இதைவிடுத்து நகரங்களை மட்டும் கருத்தில் எடுத்துக்கொண்டு அங்குள்ள வீதிகளைத் திருத்தியமைப்பதன் மூலம் மட்டும் போக்குவரத்தைச் செப்பனிட்டுவிடமுடியாது.

யுத்த ஓய்வு ஏற்பட்டும்கூட யாழ். குடாநாட்டில் அபிவிருத்திப் பணிகள் எவையும் உருப்படியாக முன்னெடுக்கப்படவில்லை என்பது தெரிந்த விடயமாயினும் தற்போது யாழ். குடாநாட்டில் ஏற்பட்டிருக்கும் பாரிய பிரச்சினை நகரம் நோக்கிய குடியகல்வாகும்.

அதாவது, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து வசதி என்பவற்றை காரணமாக முன்வைத்து கிராமங்களில் உள்ள மக்கள் யாழ்ப்பாண நகரத்தை நோக்கி நகரத் தொடங்கியுள்ளனர். இதனால் யாழ்ப்பாண நகரத்தில் திடீர் சனநெரிசல் ஏற்பட்டுள்ளது.

தென்மராட்சி, தீவகம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்வு காரணமாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்தாலும், அவர்கள் அதனையே தமது நிரந்தர வதிவிடமாக மாற்றிக்கொண்டனர். இதன் காரணமாக தீவகம், தென்மராட்சி போன்ற பிரதேசங்கள் மக்கள் இல்லாத இடங்களாகக் காட்சி தருகின்றன.

இதற்குமேலாக, இன்னோர் சாரார் தம்மிடம் இருக்கக்கூடிய வசதிவாய்ப்புக்களை அடிப்படையாகக் கொண்டு கிராமிய வாழ்க்கையைக் கைவிட்டு யாழ். நகரத்தை நோக்கிக் குடியேறத் தொடங்கியுள்ளனர்.

இவ்வாறு கிராமங்களைவிட்டு நகரத்தில் குடியேறும் மக்களின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்படாமல் அல்லது தடுக்கப்படாமல் விடப்படுமாயின் யாழ். நகரத்தில் ஏற்படக்கூடிய சனநெருசடி, சுகாதாரப் பிரச்சினை, குடிநீர்ப் பிரச்சினை என்பன எல்லைகடந்து போவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

ஆக, நகரம் நோக்கிய குடியகல்வைத் தடுக்க வேண்டுமாயின் கிராமங்கள் புனரமைக்கப்படவேண்டும். அதன் முதன்படியாக அங்கு சீரழிந்துபோயுள்ள வீதிகள் திருத்தப்படவேண்டும். அதற்கான விசேட திட்டங்களை வகுக்க அனைவரும் முன்வரவேண்டும்.

## வட-கிழக்கு அபிவிருத்திக்கென

# உலக வங்கியினால் 67.5 மில்லியன் டொலர் ஒதுக்கீடு

# தமிழர்களுக்கான அதன் பயன்பாடு குறித்து சந்தேகம்

(திருநெல்வேலி)

வடக்கு- கிழக்கு பகுதியில் 600 கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் 67.5 மில்லியன் அமெரிகக டொலர் நிதியை உலக வங்கி இலங்கை அரசிடம் வழங்கியுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கையை அடுத்து நிதியுதவியை வழங்காது பின்னடித்து வந்த உலகவங்கி, தற்போது இந்த நிதியை வழங்கியுள்ளது.

இதேவேளை, உலகவங்கியால் வழங்கப்பட்ட இந் நிதியினை அரசு எவ்வாறு பயன்படுத்தப் போகின்றது என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.

குறிப்பாக நியாப், நெக்கொட் ஆகியன 40 மில்லியன அமெரிக்க டொலர் நிதியை 5ஆண்டு காலத்திட்டங்களுக்கென ஒதுக்கீடு செய்தீன.

ஆனால், உலகவங்கியினால் வழங்கப்பட்டுள்ள 67.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியானது தமிழ் மக்களுக்கு நேரடியாக கிடைக்கும் என்பது ஐயப்பாடாகவே உள்ளது.

ஏனெனில், முன்னர் சர்வதேச நிதி ஸ்தாபனங்களால் வழங்கப்பட்ட நிதியுதவிகள் அனைததும் சிங்களக் கிராம அபிவிருத்திக்கும், யுத்த நடவடிக்கைகளுக்காகவுமே பயன்படுத்தப்பட்டன.

இதனால், உலகவங்கியால் வழங்கப்பட்ட இநநிதியை அரசு யுத்த நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

எனவே, தமிழர் தாயகத்தை அபிவிருத்தி செய்வதற்கு இடைக்கால நிர்வாகம் தேவை. இவை வழங்கப்பட வேண்டும் இல்லை யெனில் சர்வதேச நிதி நிறுவனங்கள் வழங்கும் நிதியினால் தமிழ் மக்கள் எந்த நன்மையையும் அடைய மாட்டார்கள் என்று பல்வேறு தரப்பினராலும் சுட்டிக் காட்டப்படுகிறது. (க-43)

# குண்டுத் தாக்குதலில் இருந்து தப்பித்துக் கொள்வது எப்படி?

## பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கம்

(கொழும்பு)

தற்கொலைக் குண்டுத்தாக்குதல் களில் இருந்து எபபடித தங்களைப் பாதுகாப்பது என்பது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வொன்று கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றக் கூட்டத் தொகுதியில் நடைபெற்றுள்ளது.

அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட இச் செயலமர்வில், அரசாங்கப்பகுப்பாய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பகுப்பாயவாளர் நாயகம் வி.ஜி.எஸ். குணதிலக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கவுரை ஆற்றினார்.

முன்ன ாள் பாராளுமன்ற உறுப்பினர் காமினி திஸ்ஸநாயக்க, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ மற்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் மீது நடாத்தபபட்ட குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான வீடியோப் படஙகள் காட்டப்பட்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் உள்ள விசேடப் பகுதியொன்றில் வைத்து இச்செயலமர்வு இரண்டு கட்டங்களாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நடாத்தப்பட்டது.

இதேவேளை,இந்தச் செயலமர்வு தொடர்பாக தமது கண்டனத்தை வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், சமாதான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் தற்போதைய காலப்பகுதியில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் இருந்து தப்பும் விதம் குறித்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்க வேண்டியதன் அவசியம் என்ன? என்றும் பாராளுமன்றில் கேள்வி எழுப்பியுள்ளார். (ற-121)

# கண்ணிகள் அகற்றப்பட்ட பிரதேசம் கையளிப்பு

(பொலிகண்டி)

தற்கோவளம் வராத்துப்பளை பிரதேசத்தில் டெனிஸ் கண்ணிவெடியகற்றும் பிரிவினர் 500ற்கும் மேற்பட்ட கணணி வெடிகளை அகற்றியுள்ளனர்.

இவ்வாறு கண்ணிவெடிகள் அக்றறப்பட்ட பிரதேசததை கடந்த வெள்ளிக்கிழமை டெனிஸ் கண்ணி வெடியகற்றும் பிரிவினர் பருத்தித்துறை பிரதேச செயலாளர் மற்றும் அப்பகுதி கிராமசேவை உத்தியோகத்தர் ஊடாக பொதுமக்களிடம் கையளித்தனர். (க-106)

# அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்தியப் படகுகள் மடக்கிப்பிடிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பள்ளிக்குடாக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவப் படகுகள் கடந்த வியாழக்கிழமை பள்ளிக்குடா மீனவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளன.

குறிப்பட்ட இந்திய மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் பள்ளிக் குடா மீனவர்கள் அப்பகுதி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்திய மீனவர்களின் படகுகள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதுடன் பள்ளிக்குடா மீனவர்களின் பெருந்தொகையான மீன்பிடி வலைகளையும் அறுத்து சேதமாககியுள்ளதால், மீனவர்களுக்கு பெருமளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. (க-8)

## தென்மராட்சியில் காணாமல்போனோரில்

# 15பேர்குறித்த ஆட்கொணர்வு வழக்குவிசாரணை ஒத்திவைப்பு

(திருநெல்வேலி)

தென்மராட்சி சாவகச்சேரி, மறுவண்புலோ பகுதியில படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன 15 பேர் தொடா[illegible]ன ஆட்கொணர்வு மனுமீதான விசாரணை கடந்த வெள்ளிக் கிழமை சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் இடம் பெற்றது. நீதவான் எஸ்.சுப்பிரமணியம் முன்னிலையில் மேற்படி வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 14ம் திகதிக்கு இது மீள ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் சட்டதரணி றெமீடியம் எதிராளிகள் சார்பில் கப்டன் குறூப்பும் ஆஜராகி இருந்தனர். (ப-43)

# போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோர்மீது கடும் நடவடிக்கை

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பஸ்களில் மேலதிக பிரயாணிகளை ஏற்றுவதும் மிதி பலகையில் பிரயாணம் செய்வதும் மோட்டார் சைக்கியில் மூவர் செல்வதும் தடை செய்யப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக தமிழீழ காவல்துறையினர் கடுமையான சட்டங்களை அமுல்படுத்தி வருகின்றனர். அத்துடன் மீன் கொண்டு செல்லும் லொறிகளிலும் பிரயாணிகள் சொல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

இச் செயறதிட்டங்களை மீறுவோர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென தமிழீழ காவல் துறையினர் அறிவித்துள்ளார். (க-35)

# தேர்த்திருவிழா

(வட்டுக்கேட்டை)

வட்டுக்கோட்டை அராலி மேற்கு நொச்சியம்பதி சித்தி விநாயகர் ஆலய தேர்திருவிழா இன்று திங்கட் கிழமை 9.00 மணிக் நடைபெறவுள்ளது. பகல் 12.00 மணிக்கு அன்ன தானமும் நடைபெறும்

நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு தீர்த்தத் திருவிழா நடை பெறுவதுடன் பகல் அன்ன தானமும் நடைபெறும். (க-39)

# நகர அபிவிருத்திக் குழுவொன்று யாழ்.நகரில் அமைக்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரின் சுற்றுச்சூழலைப்பேணும் வகையிலான நடவடிக்கைகளை முன்னெடுக்க விரைவில் நகர அபிவிருத்திக்குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

நகராக்கல் திட்ட நீர்விநியோக அமைச்சே யாழ் மாநாகரசபைப் பிரிவில் சுற்றுச் சூழல் திட்ட முகாமைத்துவப் பிரிவு என்ற ஒரு பணிமனையை அமைக்கவுள்ளது.

இந்தப் பணிமனை மாநகரசபையின் ஒரு அங்கமாகவே இயங்கும் இதற்கான புதிய கட்டிடம் ஒன்று யாழ் நகரில் அமைக்கப்படவுள்ளது.

நகரத்தின் சுற்றுச் சூழலைப் பேணுவதும் நகரக் கழிவுகளை பயனுள்ள விதத்தில் பயன்படுத்துவதும் அகற்றுவதுமே இந்நகர அபிவிருத்திக் குழுவின் முககிய பணியாகும்.

இதற்கென அமையும் குழுவில் மாநாகர சபை நிர்வாகிகளோடு துறைசார் பிரமுகர்களும் அங்கம் வகிக்கவுள்ளனர். (ற-19

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் அறியாமை மிக்கவர்கள், ஏழைகள், கல்வியற்றவர்கள் ஆகிய அனைவரும் உன்னுடன இரத்தத் தொடர்புடைய நெருக்கமான உறவினர்களே, உன் உடன்பிறந்த சகோதரர்களே என்பதே நீ மறந்து விடாதே.

சுவாமி விவேகானந்தர்

# கரவெட்டியில் விபத்து: மூன்றுபேர் காயம்

(பருத்தித்துறை)

கரவெட்டி அத்துளு அம்மன் கோவில் பகுதியில் நேற்றுமாலை இடம்பெற்ற ஆட்டோ மோட்டார் சைக்கிள் விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவர்களான ஐ.தேவராஜா (வயது 48), அவரது மகள் அர்ச்சுனா (வயது 17), ஓட்டோ சாரதியான ஜேசுதாஸ் அருள்குமார் ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

இதில் படுகாயமடைந்த ஐ.தேவராஜா யாழ். போதனா வைத்திய சாலையிலும், ஏனைய இருவரும் மந்திகை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-52,109)

# ஜே.வி.பியினர் எதிர்த்தாலும் இடைக்கால சபைக்கு ஆதரவு

## இ.தொ.காங்கிரஸ் அறிவிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டளைப்படியோ அல்லது ஜே.வி.பியின் சர்வாதிகாரத்தனத்திற்கோ அடிபணிய மாட்டோம் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இ.தொ.காவின் நிர்வாக செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வி.புத்திரசிகாமணி இது பற்றித் தெரிவிக்கையில் இ.தொ.கா. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொள்கைகளைப் பின்பற்றாது சுயாதீன அமைப்பாக செயற்படும். எவரும் எம்மை அதிகாரம் செய்யமுடியாது. நாம் சுயாதீன முடிவுகளையே எடுப்போம். எந்தக் கட்சிக்கும் கீழ்ப்படியோம்.

எமது கட்சி 1977 இலிருந்து சுயாதீனமாக இயங்கிவருகிறது. இனியும் அதன்படியே இருப்போம். ஜே.வி.பி எதிர்த்தாலும்கூட நாம் இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை ஆதரிப்போம். இந்நிலையிலிருந்து ஒருபோதும் மாறமாட்டோம் என்றும் புத்திரசிகாமணி தெரிவித்தார்.

இதேவேளை, இ.தொ.கவின் ஆதரவு அரசாங்கம் தனது பெரும்பான்மையை நிருபிப்பதற்கு உதவுமென ஜே.வி.பி தெரிவித்துள்ளது. ஜே.வி.பியும், இ.தொ.காவும் பல வேறுபாடுகளைக்கொண்டிருந்தாலும் ஒன்றாகப்பேசி ஒரு முடிவுக்குவருவோம் என இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது ஒருபுறமிருக்க இ.தொ.கா. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்க முன்வந்ததன் பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொள்கைகளையே அவர்கள் முன்னெடுக்க வேண்டுமென ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-6)

## கொழும்பு...

நபர்கள் முச்சக்கரவண்டி ஒன்றில் சென்று தப்பித்துக்கொண்டனர் என்றும், கொலைச் சந்தேகநபர்கள் தற்போது இனங்காணப்பட்டுள்ளதாகவும், இக்கொலைக்கும் பாதாள உலகக் கோஷ்டிக்கும் தொடர்பு இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சமாதானப்...

கீசனுக்கு எரிக் சொல்ஹெய்ம் விளக்கமளித்துள்ள நிலையில் இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் சந்தித்து, அப்பேச்சுவார்த்தை தொடர்பாக விளக்கவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இரண்டு தரப்பினருடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நிகழ்ச்சி நிரலையும் தயாரிக்கவுள்ளார்.

இரு தரப்பினருடனான பேச்சுவார்த்தைகளின் போதும் தற்போது நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையை இருதரப்பும் இதய சுத்தியுடன் கடைப்பிடிக்கவேண்டும் என்று இருதரப்பினரையும் வலியுறுத்திக் கேட்கவுள்ளார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுஇவ்வாறிருக்க தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்தும் அரசியல் படுகொலைகள் குறித்தும், விடுதலைப் புலிகள் மீது இலங்கை இராணுவத்தின் உதவியுடன் தாக்குதல் நடத்திவரும் தமிழ்க்குழுக்கள் தொடர்பாகவும் நோர்வே கவலைகொண்டுள்ளதாகவும், சமாதானத்தீர்வு தொடர்பாக அரசின் பங்காளிக்கட்சியான ஜே.வி.பியை எந்தநேரமும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த நோர்வே தயாராக இருப்பதாகவும் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். (ம)

## நோர்வே...

லியன் அமெரிக்க டொலர்களை அதிகரித்து வழங்கவிருப்பது குறிப் பிடத்தக்க அம்சமாகும்.

நோர்வே அரசின் இந்த நிதியுதவியுடன் யுத்தத்தினால் பாதிப்புக்குள்ளான வடக்குக் கிழக்கு மாகாணத்தின் புனர்வாழ்வு புனரமைப்பு சம்பந்தமான வேலைகளையும், மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில்துறை அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளையும் அரசு முன்னெடுத்துச் செல்லவுள்ளது.

இந்த நிதியுதவியுடன் ஏழு அமைச்சுக்களோடு தொடர்புடைய அபிவிருத்தி நடவடிக்கைகளையும் விஸ்தரித்து முன்னெடுத்துச் செல்வதற்கும் இலங்கை அரசும், நோர்வே அரசும் இணக்கம் கண்டுள்ளதாகவும் நிதியமைச்சின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர தெரிவித்துள்ளார். (ம-121,08)


## புல்லுமலையில்...

தக் கண்காணிப்புக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டமை அடுத்து மட்டக்களப்பு மாவட்டக் கண்காணிப்பாளர்கள் சடலங்களையும், புதைக்கப்பட்ட இடங்களையும் பார்வையிட்டனர். (ம-121)

## தென்னிலங்கை....

சேர்ந்த இவர்களில் 95 சத வீதமானோர் வடபகுதிக்கு இதுவரை விஜயம் மேற்கொள் ளாதவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில்உள்ள அகதி முகாம்களுக்குச் சென்று அங்குள்ள மக்களின் அவலங்களை, குறைகளைக் கேட்டறியவுள்ளதாகவும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங் களையும் பார்வையிடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-121)





நேற்று நடைபெற்ற நல்லூர்க் கந்தனின் சம்பரத்திருவிழாவின் போது ....

I.C.I தயாரிப்பான C.I.C
DULUX PAINT வகைகளுக்கு




SIVAN MOTOR STORES
சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்
70/1 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்.
T.P - 021 -222 2763
(C/475)

வல்லமை தந்தெமை வாழ்விப்பாய் முருகா!





தரம் நாடுவோர்
தவறாமல் நாடும் இடம்
விக்னேஸ்வரா நகைப் பூங்கா
(Wigneswara Nakai Poonka)
205/3 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
T.P : -021 4590022
(C/476)

10B, கந்தசுவாமி கோயில் வீதி
வவுனியா
T.P: 024 22221910
T.P: 024 22221857

457, காலி வீதி
வெள்ளவத்தை,
கொழும்பு - 06
T.P: 011 2559535

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.09.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.